திராவிடநாடு

25—3—62 | வார வெளியீடு | விலை 16 காசு

# இன்பம்

[ சுரா ]

★

திராவிடத்தின் நிலையை நேற்று
தெருவெல்லாம் பாடிச் சென்றோர்; பொய்
உருவத்தின் நிழலாய் இன்று
உளறியே நின்றார், அன்றோ!

பழிதனை ஏற்றே நித்தம்
பழகிய கழகம் நாளும்
விழிதனில் ஒளியைக் காட்டி
விரைந்திடும் விடுதலை நோக்கி!

சொந்தமில்லை என்று சொல்லி; தினம்
சோம்பராய் வாழ்வது கெடுதி
உயிர்போவது ஒருநாள் உறுதி; அது
அரும் நாட்டை மீட்பதெனில் இன்பம் மிகுதி!!

# நல்லதும்—கெட்டதும்........!

—[ முரளி ]—

மனித வாழ்க்கையின் எல்லையை உணர்த்துவதுபோல், பகலவன் கடலின் செந்நிறத்தை சுற்றிலும் வாரி இறைத்த வண்ணம் மிதந்து கொண்டிருந்தான். அந்தத் தீக்குழம்பின், பயங்கரத்தைத் தணிக்க எண்ணியோ என்னவோ, கடலலைகள் அத்தீக்கோளத்தை முத்தமிட்டு, முத்தமிட்டு மறைந்தன! ஆயினும் தன் முயற்சியை கைவிட்டதா......? அதுவுமில்லை! கேடு மலிந்த சமுதாயத்தை சீர்திருத்த எண்ணி, பைத்தியக்காரப் பட்டமும், 'முட்டாள்கள்' என்று அடைமொழியால் அழைக்கப்பட்டும், தன் முயற்சியை கைவிடாத தியாக உருவங்களுக்கு, அக்காட்சி உதாரணமாக விளங்கியது!

உலக நாடகத்தில் அன்றாடம் நடைபெறும் அவலக் காட்சிகளை, அச்செந்நிற வானத்துடன் இணைத்து பொருள்காண முயன்று கொண்டிருந்த மனோகரன் துடித்தெழுந்தான்......? அதோ! கடலலைகளால் விழுங்கப்படும் ஒரு உருவத்தை கண்டதன் பலன்தான் அவன் உடலில் அந்தத்துடிதுடிப்பு!

✲

தம்பி! என்ன வேலைசெய்யத் துணிந்தாய்! தற்கொலை, மனிதனின் கோழைத்தனத்தை பறைசாற்றும் பேரிகை என அறியாதவனா நீ! படித்தவன் பலரோடு பழகியவன், உலகின் நல்லதையும், கெட்டதையும் அறிந்து புரிந்து கொள்ளும் தகுதிபடைத்த நீயா இம்முடிவுக்கு வருவது! இந்த எண்ணம் உனக்கு வந்ததைப்பற்றி நான் வெட்கப்படுகிறேன்! வேதனைப்படுகிறேன்? அப்படி என்ன உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு உனக்கு துன்பச்சுமை அதிகமாகி விட்டது. நீ என்ன குடும்பத்தைக் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்பு வகிப்பவனா? உன்னைப் பார்த்தால் அப்படிக்கூடத் தோன்றவில்லையே! அப்படியேயானாலும், நீ இறந்து விடுவதால், உன் மனைவி மக்கள் நல்லநிலை அடைந்துவிடுவார்களா? அல்லது அதைக்கண்டு இந்நாட்டு அரசாங்கம்தான் உடனே நல்லது செய்துவிடப்போகிறதா?

அறிமுகமில்லாத நண்பரே! ஆறுதல் பெறும் நிலையா என்நிலை! இந்தக் கனகு காவியத் தலைவனாக வாழ ஆசைப்பட்டான். கோதையை அக்காவியத் தலைவியாக்க நினைத்தான். அவளும் அதற்கு முழு உரிமை அளித்தாள். சிறுவயது முதலே, என்னுடன் கூடி விளையாடி கொட்ட மடித்தவள் என் கோதை—பக்கத்து வீட்டு சோமு மாமாவின் மகள்! நிலச் சொந்தக்காரர், பெரிய வீடு, எங்களைவிடப் பணம் உள்ளவர்.

பருவத்திற்கேற்றவாறு இயற்கை உலக உயிர்களின் நிலையை மாற்றவில்லையா? அதுபோல்தான், சிறிய வயதின் கண்மூடும் விளையாட்டு பருவத்தில் காதல் விளையாட்டாகியது. என் பெற்றோர்கள் எவ்வித தடையும் கூறவில்லை........கூறவும் மாட்டார்கள். ஆனால் அவள் தந்தை ......? அந்தக் கேள்விக்குறி நெருங்கவில்லை எங்களை அப்போது. நான் இவண் வந்தேன் கல்லூரி மாணவனாக — படிப்பு முடிந்ததும், பாவையை, என் கோதையை மணமுடித்துக்கொள்ளலாம் என.

இவ்வாரம் அங்கு சென்றபோது தான் அறிந்தேன் கோதை இறப்பு எனும் பயங்கர நிலை அடைந்தாள் என............(உள்ளமும், உடலும் குலுங்கக் குலுங்க அழுதான்! தேற்றினேன்......பிறகு) அதுதான் நண்பரே என்னை இம்முடிவுக்குத் துரத்தியது! மனம் விரும்பாதவனை மணமுடிக்க வற்புறுத்தி, அவளை மணமகளாக்க முயன்றிருக்கிறார் அவள் தந்தை. மனமுடைந்த மங்கை, — மயானம் சென்றாள் — கையாலாகாத நான் கடலடி புக நினைத்தேன். தவறென்ன நண்பனே நான் எடுத்த முடிவில்? நீயானால் என்ன செய்வாய்—வினாக்குறியாக அமர்ந்திருந்தான் அந்த எதிர்பாராத நண்பன்.

அவளின் கதைகேட்டு, நா எழ மறுத்தது. அமைதிபெற நினைத்த நானே அழுதுவிட்டேன் அக்கதையை......தவறு! தவறு!! அவ் வரலாறு கேட்டு. தமிழ்ப் பெண்மை என்பது இதுதானே? அல்லது என் வாழ்க்கையில் குறுக்கிட்ட மற்றுமொரு நச்சுப்பூவா? இல்லை! என் வாழ்க்கையில் குறுக்கிட்டவள் தமிழ்ப் பெண்மை இழந்து, உயிர் வாழ்கிறாள். ஆனால் அவள் — கோதை — கனகுவின் காதல் மாளிகை—தமிழ்ப் பெண்மை இழக்கத் துணியாமல், தன் உயிர் துறந்தாள். வாழ்க அவள் புகழ்!

கனகு! கூடிக்குலவி மகிழ்ந்த அவ் வழகோவியமாம் கோதை மறைந்து விட்டதை எண்ணி இம்முடிவுக்கு வந்தாய்! ஆயினும் என் நிலைகேட்டால் நீ என்ன செய்திருப்பாயோ? இவ்வுலகில், நாம் நினைப்பதுபோல் நடந்துவிட்டால், பிறகு நம்மைக் கட்டுப்படுத்த ஆள் இருக்காது. இயற்கையின் சுழற்சிக்கே மதிப் பற்றுப்போய்விடும்! காதல் நிறைவேறாத நீ இம்முடிவு கொண்டாய்! ஆனால் காதல் நிறைவேறி மணம் புரிந்துகொண்டவர்கள் மட்டும் மகிழ்ச்சியுடன் வாழ்வதாக நீ எண்ணுகிறாயா? உன் முகத்தின் கேள்விக்குறி என்முன் தெரிகிறது: காதலில் தோற்றவனைவிட, வெற்றி பெற்றவன், வாழ்க்கைப் பாதையில் சென்றபின் தானாகவே, குளமோ, குட்டையோ நாடுகிறான். காரணம்.. ......?

இனிப்புப் பண்டத்தைப் பார்க்கும் போது உண்ண ஆவல் உண்டாகிறது. உண்டபின் திகட்டிவிடுகிறது. அதுபோல், இக்காதல் வாழ்க்கையும்! காதலிக்கும்போது உள்ள ஆவல், ஆர்வம், சகிப்புத் தன்மை, மனத்திண்மை, மணமான பின்பு மறைந்துவிடுகிறது. ஏன்? முன்பு அளிக்கப்படும் உரிமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சுதந்திரம், மணமான பின்பு அளிக்க முன்வருவதில்லை — ஆண் ஒதுங்குகிறான்......பெண் பேயாகிறாள்...... குடும்பம் மயானமாகிறது.

என் வாழ்க்கைக் கதை, உன் வரலாற்றைவிட மிகவும் பயங்கரமானது. இக்கதையை ஏன் கூறுகிறேன் தெரியுமா? என் மனச்சுமையும் குறையும்—உனக்கும் ஆறுதலாக இருக்கும். கொள்ளைக்காரன், கொலைகாரனைக் காட்டி, நான் அவனைவிட யோக்கியன் என்று கூறி அமைதி அடைகிறான். பள்ளியில், மாணவன் பக்கத்துப் பையன் ஐந்து மதிப்பெண்தான் பெற்றான்—நான் ஆறு மதிப்பெண்ணல்லவா பெற்றுவிட்டேன். நான் அவனைவிட புத்திசாலி என்று தன் அறிவுக்கு அளவெடுக்கிறான். அதில் அவனுக்கோர் மனமகிழ்ச்சி! அதைப் போல்தான் இதுவும். கேள் என் கேலிக்குரிய கடந்தகால வாழ்க்கையை!

( 4-ம் பக்கம் பார்க்க )

# தேர்தல் தரும் படிப்பினை

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (25—3—62 தனிப்பிரதி 16 காசு [ இதழ்

இம்முறை இத்துணைக்கண்டத்தில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை என்பதை உலகமே தெரிந்து கேலி செய்யக்கூடிய அளவுக்கு, ஆளுங்கட்சியான காங்கிரஸ் தன்னுடைய அதிகார பலத்தைக் குறுக்கு வழியில் பயன்படுத்தியிருக்கிறது என்ற உண்மை எவராலும் மறுக்கமுடியாததென்று நல்லவர்கள் — ஜனநாயகப் பண்பு தெரிந்தவர்கள்—அரசியலறிஞர்கள்—பொதுநல நோக்கம் கொண்டவர்கள் எல்லாருமே ஒப்புக்கொண்டு தலைகுனியவேண்டிய நாகரிகமற்ற நிலை இத்துணைக் கண்டத்துக்கு ஏற்பட்டுவிட்டது.

இந்தக் கருத்தை நாம் கூறவில்லை. ஆளுங்கட்சியை ஆதரிக்கும் ஏடான "சுதேசமித்திரன்" போன்ற ஏடுகளும், வேறு பல நடு நிலைமையாளர்களும் கூறியவையாகும்.

"சுதேசமித்திரன்" இதழ் தந்துள்ள சில கருத்துக்களை வாசகர்களின் பார்வைக்கு வைக்கிறோம்.

1. **ஆளுங் கட்சியினர், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசாங்க சாதனங்களைத் துஷ்பிரயோகம் செய்துவந்திருப்பதாகப் புகார்கள் வெளியாகி இருக்கின்றன.**

வடக்கேயுள்ள பல இராச்சியங்களில் இந்த முறையற்ற செயல் கடைப்பிடிக்கப்பட்டதாக வெளிவந்த செய்தியையே அந்த ஏடு எடுத்துக்காட்டி இடித்துரைத்திருக்கிறது.

2. **அரசியல் கட்சிகளுக்கு தொழில் அல்லது வர்த்தக ஸ்தாபனங்கள் நன்கொடை கொடுப்பதை அடியோடு தடுக்கவேண்டும்.**

இது, பண்டித நேரு அவர்களிடம் ஒரு ஸ்தாபனம் இருபது இலட்சம் ரூபாயைத் தேர்தல் நன்கொடையாக அளித்ததை எடுத்துக்காட்டிக் கண்டித்திருக்கிறது.

3. **பண பலத்தைக் கொண்டு அல்லது வோட்டுக்களை விலைக்குவாங்கிச் சென்றவர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவராயினும் அவர்கள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகார்.**

இது, பணபலத்தால் வெற்றிபெற்ற கட்சி எது வென்று வெளிப்படையாக எழுதும் துணிவு ஏற்படாததாலோ அல்லது மறைமுக உபதேசம் செய்தால் ஒருவேளை திருந்தக்கூடும் என்ற எண்ணத்தாலோ, பண பலத்தால் வென்றது இன்ன கட்சிதான் என்று சுட்டிக் காட்டாமல் அந்த ஏடு பெருந்தன்மையுடன் உண்மையை உலகுக்கு அறிவித்திருக்கிறது.

4. **தற்போது ஆளுங்கட்சி இனி எப்போதும் பதவியில் இருந்துவருமென்று யாரும் சொல்லமுடியாது, அவர்கள் எதிர்க்கட்சியாகக் கூடிய நிலையிலும், அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் பொருட்டுத் தேர்தல் முற்றிலும் நேர்மையாக நடப்பதில் அவர்கள் அக்கறைகாட்ட வேண்டும்.**

இது, இப்போது ஆளுங்கட்சியாக இருக்கும் காங்கிரசு இனி எதிர்க்கட்சியாக மாறிவிடும் அறிகுறிகள்—அரசியல் தெளிவுகள் — ஆளுங்கட்சியின் அளவுக்குமீறிய கொடுமைகளால் ஏற்பட்டுவிடுமென்பதை நன்கு உணர்ந்து—அவர்கள் மொழியில் கூறுவதானால் 'அரசியலாரூடம்' கூறுவதாக அமைந்துள்ளது.

5. **சில இடங்களில் வெற்றியடைந்தவருக்கும் தோல்வியடைந்தவருக்குமுள்ள வித்தியாச ஓட்டுக்களை விடச் செல்லுபடியாகாத வோட்டுக்கள் பன்மடங்கு அதிகம்,**

இது, சில வேட்பாளர்கள் தோல்வியடைய ஏற்பட்ட காரணத்தை விளக்க வந்த அந்த ஏடு, வாக்குப்பதிவு முறை சரியானபடி வகுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை தேர்தல் அதிகாரிகளுக்கு நினைவுறுத்தி, இனி மேலாவது வாக்குப்பதிவு முறையை ஒழுங்காக-எழுத்து வாசனையற்ற பாமர மக்கள் எளிதில் புரிந்து வாக்களிக்கும் முறையில்—குழப்பம் எதுவும் ஏற்படாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பதை எடுத்துக் காட்ட எழுதப்பட்டதாகும்.

இப்படிப்பட்ட இன்னும் பல காரணங்களை அந்த ஏடு எடுத்துக்காட்டி ஜனநாயகம் இந்தத் தேர்தலின் மூலம் கொலை செய்யப்பட்டிருக்கிறதென்பதை விளக்கியிருக்கிறது.

இந்தமுறை நடைபெற்ற தேர்தலில் பணநாயகம் வென்றது; ஜனநாயகம் தோற்றுவிட்டது என்று நாமும் நல்லவர்கள் பலரும் கூறும் உண்மை தெளிவாகிவிட்டதென்பதை எடுத்துக்காட்டவே இதனை எழுதுகிறோம்.

பணநாயகம் இனி இந்த நாட்டில் தலையெடுத்து, அதன் வாயிலாக ஜனநாயகமும், நேர்மையும், நாகரிகமும், பண்பும், மனிதத்தன்மையும் இல்லாதொழிக்கும் நிலைமாற, நாம் இனிப் பாடுபல படவேண்டிய நிலைக்கு இந்தத் தேர்தல் ஒழுங்கீனங்களும், முறைகேடுகளும் நமக்கெல்லாம் ஒரு படிப்பினையாக அமைந்துவிட்டது.

எனவே, இந்தத் தேர்தல் தரும் படிப்பினையை நல்லதொரு பாடமாகக்கொண்டு நாம் இனி நமது பணியினை—நாட்டு விடுதலைக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் ஏற்றதாக அமைத்துக்கொள்ளவேண்டுமென்ற உறுதிப்பாட்டினைக் கொள்வோமாக.

2-ம் பக்கத் தொடர்ச்சி

பகலவனைக்கடல்விழுங்கி,குளிர்ச்சி அளித்து மிதக்கவிட்டதுபோல், வெள்ளித் தகடு ஒன்று, பந்துபோல், எழும்பி, எழும்பி நிர்மலமான வானத்தில் உருட்டிவிட்டது. அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே, என் மனதையும் அமைதியாக்கிக் கொண்டு, என் கடந்தகால வாழ்க்கைக் காட்சிகளைத் தொடர்கதை தொகுப்பதுபோல் ஒன்று சேர்த்துக் கனகுவுக்குச் சொல்லத் துவங்கினேன். அருகிருந்த துறைமுகக் கப்பலின் சங்கொலி துவக்கிவைத்தது அச்சோக நாடகத்தை!

கனகு! அப்போது நான், நீ கூறியதுபோல் பால்மணம் மாருத மழலை மொழியினன். பயங்கரச் சுழலுக்கும், சுருவுக்கும் துணிந்து, கடலடி சென்று முத்துப்பெற்ருல் எப்படி ஒருவன் மகிழ்வானே, அவ்வாறு ஈரைந்து மாதம் சுமந்து, உலகிலுள்ள துன்பங்களுக்கெல்லாம் தலையாய துன்பமுற்று, இறுதியில் என்னை ஈன்ற தாய் அளவுக்கதிகமான அன்பு வைத்தாள் என்மேல். ஒருக்கால், இவ்விளம் வயதிலேயே தந்தையை இழந்தவன், தந்தையின் முகத்தைக்கூட கவனம் வைத்துக் கொள்ளாத வயதிலேயே அவரைப் பிரிந்தேன் என்ற காரணத்தாலோ என்னவோ, என்மேல் தாய் அன்பு பொழிந்தாள் போலும்!

தத்தித் தவழும் பருவம், என்னை விட்டுத் தத்தித்தவழ்ந்து, நடைபயிலும் திறம் பெற்றேன். அப்போதுதான் 'கண்மணி' எனக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டாள் — 'மாமன் பாரடி உனக்கு'! என்ற முறையில் என் பிஞ்சு இதயத்தில் கீறிவிட்ட அக்கோடு என் இதயத்தின் வளர்ச்சியுடன் வளர்ந்தது. அந்த எண்ண வளர்ச்சிதான், பருவத்தில் காதலென்ற பொருள் கொடுத்தது. அவளும் அந்தப் பொருளுக்குச் சுவை சேர்த்தாள்.

காலம் நமக்காகக் காத்திருக்கிறதா! கல்லூரி என்னை வா! வா!! என இருகரம் நீட்டி அழைத்தது. அவலுடன் ஓடோடி வந்தேன் இங்கு! ஆனல் கண்மணிக்கு ஆறுதல் கூறிய நேரம். இரண்டு கல்லூரி பட்டம்கூட வாங்கியிருக்கலாம். விவரிக்க வேண்டியதில்லை உனக்கு —அனுபவப்பட்டவனல்லவா நீ!

முதல் வருட விடுமுறைக்கு வீட்டுக்குச் சென்றேன். கண்மணியைக் கண்டேன். சந்திரமண்டலத்தைக் கண்ட 'யூரிகாகரின்'கூட அவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருக்கமாட்டான். ஆற்றங்கரையும், அல்லித் தடாகமும் எங்களைக் கண்டு மிக்க மகிழ்ச்சிகொள்ளும். இயற்கையோடு இயைந்த அவ்வின்பக் காட்சிகளை அவைகள் எப்போதுதான் கண்டிருக்கும்......இனி எப்போது தான் காணப்போகிறது......?

விடுமுறை வேகமாகக் கழிந்தது. பழைய முறையிலேயே அவளிடம் பாடம் உரைத்துவிட்டு கல்லூரி வந்தேன்.

மனிதனின் மன எழுச்சியைவிட, காலச்சக்கரம் வேகமாகச் சுழலுகிறதோ? ஓராண்டு ஓடிவிட்டதே! ஊரடைய புகைவண்டி ஏறினேன். செங்கையைக் கடந்த புகைவண்டி, ஒரு பெரிய இரைச்சலுடன் நின்றது. காரணம், வண்டி தடம்புரண்டுவிட்டது. என் வாழ்க்கை வண்டியின் முடிவுக்கு, அந்த விபத்து ஓர் முன்னறிவிப்பு என்று அப்போது எனக்குத் தெரியவே தெரியாது!

துள்ளித்துடிக்கும் இதயத்துடன் வீடடைந்தேன். ஏதோ ஒரு மெல்லிய இனிமையை என் உள்ளமும் உடலும் உணர்ந்தது. எதிர்வீட்டு நிலைப்படியை ஆவலுடன் நோக்கினேன். அந்திவானத்து அழகெல்லாம், ஆட்சி செலுத்தும் அங்கு, என்று எக்களிப்புடன் நோக்கினேன். ஆனல், இருள் மூடிய மௌனம் என்னை கெக்கலி செய்தது. ஆம்! நான் வருவதைக் கண்மணிக்கு அறிவித்திருப்பாள். அழகு ஒளிஉமிழ, கண்மணி காத்திருப்பாள் கதவருகில் என எண்ணி இறும்பூதெய்திய என் இதயத் தாமரை, அவ்வெற்றிடத்தைக் கண்டுசுருங்கி,வாடித்தலைசாய்த்துக் கொண்டது. ஒரு நியதி விதித்திருக்கிறது இயற்கை! நானை ஆதவனைக் கண்டு மலருவோம் என ஆறுதலடையும் தாமரை! ஆனல் என் இதயத் தாமரைக்கு ஏது அவ்வளவு பொறுமை!

வீட்டில் தாயைக்கண்டு, நலம் உசாவிவிட்டு, எதிர்வீட்டுக்கு ஓடினேன். கண்களில் கண்ணீர் பளபளக்க பார்த்துக்கொண்டிருந்தார்கள் என் அன்னை. களிப்புக் கண்ணீர் என எண்ணியது என் மனம்.

கண்மணியின் தந்தை வரவேற்ருர்......! ஆனல் அவர் முகத்தில் ஆவல் இல்லை...கடமை பிரதிபலித்தது. நலம் உசாவிவிட்டு என் மன எழுச்சியின் முழு உருவைச் சொல்லாக்கி, 'கண்மணி! கண்மணி!!' என்றேன். அந்தக் கோகிலக் குரலாள் 'அத்தான்!' என்று அழைத்த வண்ணம் எதிர்வருவாள் என நோக்கினேன்......ஆனல்.........'யாரது? தம்பியா! எப்போது வந்தாய் தம்பி!' என்று கேட்டவண்ணம் வந்தாள் அவளின் தாய். குயிலிசை எதிர்நோக்கினவன், எதிர்பாராமல் கோட்டான் குரல் கேட்டால்......?' இப்போதுதான்......கண்மணி எங்கே? —என்றேன்.கண்ணில் நீர் நிறைய; 'கணவனில்லம் சென்றுள்ளாள்'.... என்ருர் அப்பெரியவர்.

சாதாரணமாகக் கூறியிருந்தால் கூட நம்பியிருக்கமாட்டேன். கண்ணில் நீர்நிறையக் கூறும் அப்பெரியவரின் வார்த்தைகள், குமுறும் எரிமலையின் வாயில் நிற்கவைத்தது போல் இருந்தது. நிதானித்து, அருகிருந்த தூணைப் பிடித்தவண்ணம் நழுவிக்கொண்டே கீழே உட்கார்ந்தேன். வேறு பேசவோ, கேட்கவோ என் மனம் இடம் தரவில்லை. ஆவலுடன் அருகிருக்கும் கடைக்குச் சென்று, வடைவாங்கிவரும்போது, எதிர்பாராமல்,ஒரு காக்கை, அதைப் பறந்துவந்துபறித்துச்சென்ருல், ஒரு சிறுவன் எப்படி திகைத்துக் குழப்பம் அடைவானே, கலங்குவானே, அதுபோல் ஆகிவிட்டது என் நிலையும்.

என்னையுமறியாமல், வீடடைந்தேன். அணைமோதும் பெருவெள்ளம், எவ்வாறு சிறு இடம் கிடைத்தாலும், உடைத்துக்கொண்டு, உள்புகுகிறதோ, அஃதேபோல் என் தாயை, அன்பு தெய்வத்தைக் கண்டதும், கதறிக்கொண்டு கால்களில் விழுந்தேன். 'அம்மா' கண்மணியை மணமுடிக்க அவர்கள் முயலுவதாக ஒரு வார்த்தை எனக்கு எழுதினலும், நான் வந்து, அவர்களைக் கண்டு,ஒருவாறு கெஞ்சிக்கூத்தாடி, அவளை என் கண்மணியை—தவறு! தவறு!! பறிபோன பசும்பொன்னை அடைந்திருப்பேனே! நீங்கள்கூடவா அம்மா, பெற்ற மகனுக்குத் துரோகம் செய்வது!—என்றேன்.

மனேகரா! நீயா இவ்வாறு கூறுகிருய். பெற்ற மகனுக்கு எந்தத் தாயாவது தீங்கு செய்வதை எங்காவது கண்டதுண்டா? அஃதும் நான் உனக்குத் துரோகம் செய்வேனு? உன் மகிழ்ச்சி ஒன்றுதான் உயிர்நாடி. கணவனை இழந்த நான் உயிருடன் இன்னமும் இருக்கிறேன்! நீ மகிழ்ச்சியுடன் வாழ்வதை ஒரு நாளாவது பார்த்துவிட்டு இறக்க வேண்டும் என்ற ஒரு நப்பாசையால்தான். தாய்க்குலத்தின்

(16-ம் பக்கம் பார்க்க)

காஞ்சிபுரம்

25-3-'62.

# தம்பி !

தொகுதிகளிலே நல்ல தொடர்பினை, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என்று இருந்துவிடாமல், அந்தத் தொகுதியிலே உள்ள கழகத் தோழர்களின் குழு ஒன்று, அத்தகைய தொடர்பினை வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று சென்ற கிழமை குறிப்பிட்டிருந்தேன். இது, ஏன் அவ்விதமான தொடர்பு, கழகத் தோழர்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று கேட்கவும் கடிந்துரைக்கவும் எழுதப்பட்டது அல்ல. இனி அவ்விதமான முறையிலே பணி இருக்கவேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுவதற்காகக் கூறினேன்.

தொகுதியின் நிலைமைகளை, நெருங்கிய, இடைவிடாத தொடர்பு மூலம் நன்கு தெரிந்து வைத்துக்கொள்ளும் குழு அமைந்து, நல்ல முறையிலே வேலை செய்து வந்தால், நாளாவட்டத்தில், இந்தக் குழு அந்தத் தொகுதிக்கு ஏற்ற வேட்பாளர் எவர் என்பதை எடுத்துரைக்கும் தகுதியும் பெற்றுவிடும். அந்தத் தகுதி, மெள்ளமெள்ள உரிமையாகவும் வடிவமெடுக்கக்கூடும்.

இன்று நமது கழக அமைப்பு, சிற்றூர்க் கிளை, வட்டக் கழகம். மாவட்டக் கழகம், என்று, நிர்வாக அமைப்புகளை அடிப்படையாகக்கொண்டு இருந்து வருகிறது. இதனைக் கூடத் திருத்தி, தொகுதிகளை நமது 'வட்டமாக'க் கொள்ளலாமா என்றுகூட எண்ணம் பிறக்கிறது.

அடித்தளமாகச் சிற்றூர்க் கிளைகளும், ஒரு தொகுதியிலே எத்தனை சிற்றூர், பேரூர்க் கிளைகள் உள்ளனவோ அவை இணைக்கப்பட்டு, 'தொகுதி' அல்லது வட்டம் அல்லது கோட்டம் என்ற முறையிலே, அமைக்கலாமா என்பதுபற்றி, எண்ணிப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே எழக்கூடிய, நல்லவைகளைப்பற்றி மட்டுமேயல்லாமல், கெடுதல்கள் எவையேனும் உண்டாகக்கூடும் என்று தோன்றினால் எடுத்துரைக்கத் தயங்கவேண்டாம் — கடிதவாயிலாக. ஏனெனில், நான் இதுபற்றி எந்த ஒரு முடிவான கருத்துக்கும் வந்துவிடவில்லை. யோசிக்கத் தொடங்கியுள்ளேன்.

காங்கிரசல்லாதார் வெற்றிபெற்ற இடங்களை வேண்டுமென்றே புறக்கணித்து, பாழ்நிலை ஏற்படுத்தி, அதன் மூலம் கெட்டபெயரைக் காங்கிரசல்லாதாருக்கு ஏற்படுத்தி வைத்து, அதனைப் பயன்படுத்தி அடுத்த தேர்தலிலே காங்கிரசு கட்சிக்கு வெற்றிதேடிக் கொள்வது என்பது 'தரக்குறைவான' முறை; மக்களாட்சி முறையைப் பாழ்படச்

## அறுவடையும்—அணிவகுப்பும்

[ 3 ]

செய்யும் சூது; மக்கள் இன்னமும் பாமரத்தன்மையிலேயே இருக்கிறார்கள், அவர்களை மிரட்டவும் மயக்கவும் முடியும் என்ற எண்ணம் கொண்டவர்களின் சூழ்ச்சித் திட்டம்.

இந்த 'முறை' வளருவது, ஆட்சியில் இடம் பிடித்துக்கொள்ளும் எந்த ஒரு கட்சியும் தன் ஆதிக்கத்தை நீடித்துக்கொள்ள வழி செய்து, மக்களாட்சியின் மாண்பினை மாய்த்துவிடும். இந்த ஆபத்தான முறையை எதிர்த்து செயலற்றதாக்கிவிட வேண்டும்.

ஆளுங்கட்சி வெற்றிபெறாத தொகுதிகளிலே, எந்த முன்னேற்றமும் ஏற்படாது என்று கூறுவது அறியாமையும் அகந்தையும் மட்டுமல்ல அரசியல் அறமுமாகாது, சட்டமும் அதனை அனுமதிக்காது. எனவே, ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டுவிடும் கட்சியினர் வெளிப்படையாக அவ்விதம் பேசமாட்டார்கள். சட்டசபையில் பேசும்போதோ, கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள்போலவும் மக்களுடைய நலன்களுக்காகவே வந்துதித்துள்ளவர்கள்போலவும் பேசுவர். செயலோ முற்றிலும் அருவருக்கத்தக்கதாக இருக்கும்.

> "ஏரி மராமத்து வேலை ஏழாண்டுகளாகச் செய்யப்படவில்லை. இந்த ஆண்டாவது அதனை மேற்கொள்ள வேண்டும்."

என்று சட்டசபையிலே கழகத் தோழரோ, காங்கிரசல்லாதவர் எவரேனுமோ கூறும்போது, அமைச்சர்கள் ஆத்திரப்பட்டு,

> எங்களைத் தோற்கடித்த தொகுதி அது. அங்கு ஏரி மராமத்து வேலை செய்ய முடியாது

என்று பேசமாட்டார்கள்; பேசக்கூடாது; பேசினால், மக்களாட்சியின் மாண்பு அறிந்தோர் அனைவரும் கண்டிப்பார்கள். எனவே அமைச்சர்கள் அவ்விதம் பேசாமல்,

> கனம். அங்கத்தினர் தமது தொகுதியிடம் அக்கரைகாட்டுவது பாராட்டத்தக்கது தான், என்றாலும், ஏரி மராமத்து வேலை என்ற பிரச்சினையில் உள்ள சகல தகவல்களையும் படித்துத் தெரிந்துகொண்டு இங்கு அதுபற்றிப் பேசியிருந்தால் பொருத்தமாகவும் இருந்திருக்கும், தக்கபலனும் ஏற்படும்.

என்று கூறுவார். தம்பி! புரிகிறதல்லவா? இந்த உறுப்பினர், விவரம் தெரியாமல் பேசுகிறார், படிக்காமல் எதையோ, வாய்க்குவந்ததைப் பேசுகிறார் என்று அமைச்சர் கேலி செய்கிறார். ஏன்? அந்த உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தவர்கள், செச்சே! விவரமறியாத, பொறுத்தமாகப் பேசத்தெரியாத ஒருவரை அல்லவா நாம் தேர்ந்தெடுத்து அனுப்பிவிட்டோம். அதனால்தான், நமது தொகுதி சீர்படவில்லை, என்று எண்ணிக்கொள்ள வேண்டுமாம்! எரிச்சல் கொள்ளவேண்டுமாம்!! ஏளனம் செய்யவேண்டும், எதிர்க்கவேண்டும், இனி 'ஓட்டு'ப் போடக்கூடாது என்று தீர்மானிக்கவேண்டுமாம்! இதற்காகவே இப்படி, 'இடுப்பொடிக்கும் பேச்சுப் பேசுவதை வாடிக்கையாக்கிக்கொள்கிறார்கள்.

அதிலும் ஆளுங்கட்சியிலே எண்ணிக்கை மிக அதிகமாக இருந்துவிட்டால், அமைச்சர் இதுபோன்ற 'இடுப்பொடிக்கும்' பேச்சுப் பேசியதும், ஆளுங்கட்சியினர் ஆரவாரம் செய்வர்; கேலிச் சிரிப்பொலி செய்வர்!

செச்சே! நாம் தேர்ந்தெடுத்துஅனுப்பிய உறுப்பினருக்கு, சட்டசபையிலே மரியாதை கிடையாது; கேலிப் பொருளாக இருக்கிறார்!—என்று எண்ணி, அந்தத் தொகுதி மக்கள், தமது உறுப்பினர் குறித்துத் தாழ்வான கருத்தைக் கொள்ளவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும், 'மட்டரகமான' முயற்சி இது. இதனை, மக்களாட்சியின் மாண்பினைப் போற்றுபவர்களும், அறநெறியில் பற்றுக்கொண்டவர்களும் மேற்கொள்ள மாட்டார்கள்; எதைச் செய்தாவது அரசியல் ஆதிக்கத்தைப் பெறவேண்டும், எந்த முறைகளைக் கையாண்டாகிலும் பெற்றதை இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற போக்கினர் இம்முறைகளைக் கையாள்வர்.

தொகுதி மக்களுக்கு உறுப்பினரிடம் பற்றுக் குறைவு ஏற்பட்டுவிடுவதுகூட இருக்கட்டும்,

> என்ன சொன்னாலும் கவனிக்க மறுக்கிறார்கள்.
>
> எதைக் கூறினாலும் ஏற்றுக்கொள்வதில்லை.
>
> எத்தனை முறை கேட்டாலும் நன்மை கிடைப்பதில்லை

என்ற நிலையைக் காணும்போது உறுப்பினருக்கே, மனம் உடைந்து போகிறது. சட்டசபையிலே நாம் இருப்பதனால் என்ன பலன்? என்ற சந்தேகம் அவருக்கே ஏற்பட்டுவிடுகிறது. எதையும் செய்யமுடியாமல், எதற்காகச் சட்டசபையிலே இருப்பது? என்று எண்ணுகிறார். சலிப்பு உணர்ச்சி மேலோங்கிவிடுகிறது.

இதற்கு இடையிலே அமைச்சர்கள் அந்தத் தொகுதிகளிலே 'உலா' வருவார்கள்; தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உடனழைத்துக்கொண்டு அல்ல;

அவரால் தோற்கடிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிக்கார ருடன்!!

காங்கிரஸ் ஆட்சியின் அருமை பெருமை களை அமைச்சர் பேசுவார்.

தொகுதியின் சீர்கேடான நிலைமைகளை யும் இதனைப் போக்கமுடியாமல் சட்டசபை யில் வெட்டியாக உட்கார்ந்துவிட்டு வரும் உறுப்பினரைக் கண்டித்தும், காங்கிரஸ் 'பிரமுகர்கள்' பேசுவார்கள்.

அடுத்தமுறை எப்படியும் காங்கிரசுக்கு வெற்றிதேடிக்கொடுத்து, தொகுதியின் சீர் கேடுகளைப் போக்கிக்கொண்டு சகலவித மான நன்மைகளையும் பெற்றுக்கொள்ள இப் போதே உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று, ஊரின் 'பெரியபுள்ளி' பேசுவார். அமைச்சர் புன்னகை புரிவார்.

தம்பி! இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் மக்க ளுக்கு என்ன எண்ணம் ஏற்படும்? காங்கிரசுக்கு 'ஓட்டுப்'போடாததால்தான் நமது தொகுதியிலே நன்மை கிடைக்கவில்லை; அதனாலேதான், காங்கிரசு அமைச்சர்கள் நமது தொகுதியைக் கவனிக்கவில்லை; நாம் தவறு செய்துவிட்டோம்; அடுத்தமுறை காங்கிர சுக்கு 'ஓட்டு'ப் போட்டால்தான், தொகுதி நிலைமை சீர் படும் என்ற முடிவுக்குத்தானே.

இந்த முறையை மெத்தத் திறமையுடன், கழகம் வெற்றிபெற்ற தொகுதிகளில், காங்கிரஸ் தலைவர்கள் கையாண்டனர்.

ஏரி, மராமத்துவேலைபற்றி நம்ம எம். எல். ஏ. பேசினாராமே......

ஓ! பேசினாரே! 'கொல்'லென்று சிரித்தார் களே அவர் பேச்சைக்கேட்டு......

ஏன்? ஏன்? ஏன் சிரித்தார்கள்?

சிரிக்காமல் என்ன செய்வார்கள்? ஏதா வது விவரம் தெரிந்து பேசினால்தானே!!

அப்படியா...ஆசாமி மோசம்தானா...?

ஆளுடக்காரனைப் போய்க்கேள்! அன்று காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டிருந்தால், இப் படியா நிலைமை இருந்திருக்கும்! ஏரி, மரா மத்து வேலைக்கு ஏழு ஆயிரம் இருந்தால் போதும். வருஷம் இரண்டு ஆகிறது, இந்த ஆள் சட்டசபைக்குப்போய்! இந்த ஒரு காரி யத்தைச் செய்ய முடியவில்லை. எப்படி முடி யும்? சாமர்த்தியம் வேண்டாமா? மந்திரிகளை மனம்போன போக்கிலே திட்டிவிட்டு, ஏரி மரா மத்து வேலையைக் கவனிக்கச்சொன்னால் அவருக்குத்தான் எப்படி மனம்வரும்? ஏரியா வது குளமாவது என்று இருந்துவிட்டார்! நாம் தானே கஷ்டப்படுகிறோம்.

இப்படி ஊரிலே 'பேச்சு'கிளம்பும்; கிளப்பிவிடப்படும். உறுப்பினர்மீது அருவருப்பு வளராமல் இருக்குமா?

எந்தக் கட்சிக்கு மக்கள் வாக்களித்திருந்தாலும், ஆளுங்கட்சி எதுவரினும் கட்சிப்பாகுபாடு பார்க்காமல் எல்லாத் தொகுதிகளுக்கும் நல்லவைகளைச் செய்தாக வேண்டும்; அதுதான் சட்டம்; அதுதான் அறநெறி என்ற அடிப்படையை எல்லா மக்களுமா அறிந்திருக் கிறார்கள்; எடுத்துக் கூறும்போது, எல்லோருக்கும் புரிந்துவிடுகிறது; புரிந்துகொள்பவர்களேகூட, ஆமாம்! நமது உறுப்பினர் என்ன செய்வார்? அவர் அவரு டைய கடமையைச் செம்மையாகத்தான் செய்திருக் கிறார்; காங்கிரஸ் மந்திரிகள்தான் வேண்டுமென்றே, வஞ்சனை செய்கிறார்கள், இப்படிப்பட்ட வஞ்சகம் செய் யும் கட்சியை இனி ஒருமுறை ஆட்சியிலே அமரவிடக் கூடாது; அமர்ந்தால் ஜனநாயகத்துக்கே ஆபத்து ஏற் படும் என்ற தெளிவான முடிவுக்கு எங்கே வரமுடி கிறது!

நமக்கு எதற்காகத் தத்துவ விசாரம், நமக்கு நல்லதுவேண்டும். காங்கிரசுக்கு 'ஓட்டு'ப்போட்டால்தான், நல்லது கிடைக்கும் என்று அமைச்சர்களே கூறிவிடுகிறார்கள். அவர்களிடம்போய், இது சரியா, முறையா, அறமா, நெறியா என்றெல்லாம் விவாதம் நடத்தவா முடியும்! நமது காரியத்தைச் சாதித்துக்கொள்ள வழிதேட வேண்டுமே தவிர, அரசியல் தத்துவம்பற்றிப் பேசிக் கொண்டிருப்பது, வீண்வேலை. ஆகவே காங் கிரசுக்கே 'ஓட்டு'களைப் போட்டுவிடுவோம்,

என்றுதான், வாழ்க்கைத் தொல்லையிலே ஈடுபட்ட பெரும்பாலோர் எண்ணுவார்கள்.

இந்த மனப்பான்மையிலே நம்பிக்கைவைத்துத் தான், காங்கிரசுக் கட்சியினர், சென்றமுறை, கழகம் வெற்றிபெற்ற தொகுதிகளிலே பேசும்போது, மிக உறுதியாகக் கூறிவந்தார்கள்

அடுத்தமுறை இங்கு கழகம் வெற்றி பெறாது

என்று. திட்டமிட்டு வேலையும் செய்தார்கள்; மிகப் பெரும் அளவு வெற்றியும் பெற்றார்கள்.

இப்போது கழகம் வெற்றிபெற்றுள்ள 50-இடங்களிலும், மறுபடியும் கழகம் வெற்றி பெற விடமாட்டோம் என்று இப்போதே பேசுகிறார்கள்.

அக்ரமம், என்கிறாய்! அரசியல் சூழ்ச்சி என்று கண்டிக்கிறாய்! அதனால் என்ன, தம்பி! அதற்காக, ஆதிக்க வெறிபிடித்தவர்கள், அச்சமோ, கூச்சமோ அடையப் போவதில்லை.

அப்படியானால், அண்ணா! இந்த ஆபத்திலிருந்து விடுபட, இந்த அநீதியை ஒழித்துக்கட்ட வழியே கிடையாதா? இப்படியே ஒரு அக்ரமத்தை வளரவிடலாமா? என்றெல்லாம் கேட்கிறாய். தம்பி! வழி இல்லாமற்போகவில்லை. சென்றமுறையே அதனைக் குறிப்பாக நமது தோழர்களிடம் கூறி இருக்கிறேன்; ஆனால் திட்டமிட்டுச் செயலில் ஈடுபடவில்லை; சென்றமுறை.

இம்முறையும் அதுபோல இருந்துவிடப் போவதில்லை.

தொகுதியில் நெருங்கிய, தொடர்பினை நமது உறுப்பினர்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

அவருக்குத் துணையாகவும், வழிகாட்டவும், இந்தத் தொடர்பினை ஒரு குழு கவனித்துக்கொள்ள வேண்டும்.

தொகுதிக்குத் தேவையானவைகளைக் குறித்து சட்டமன்றத்திலே எடுத்துரைக்க வேண்டும்.

எடுத்துரைத்ததுபற்றி தொகுதியில் அவ்வப்பொழுது உறுப்பினர்களும், குழுவும் விளக்கியபடி இருக்கவேண்டும்.

முறைப்படி எடுத்துக்கூறியும், காங்கிரசு அரசு தொகுதியின் குறைபாடுகளை நீக்கத் தவறினால், அதனைத் தொகுதி மக்களிடம் எடுத்துக்காட்ட வேண்டும்.

***அதற்குப் பிறகும் காங்கிரஸ் அரசு வேண்டுமென்றே தொகுதியைப் புறக்கணித்து, கேடு செய்திட முனைகிறது என்றால், தொகுதியின் உறுப்பினரும், குழுவும், தொகுதியின் குறைபாடுகளை நீக்க, நேரடி நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். இந்த நேரடி நடவடிக்கை என்பது, அமைதிகெடாத விதமாகவும், சட்டத்துக்குக் கேடு ஏற்படாத முறையிலும் அமைதல் வேண்டும்.***

**சம்பந்தப்பட்ட அலுவலகங்கள், அலுவலாளர்கள் முன்பு, மறியல் செய்தேனும், தொகுதியின் குறைபாடுகள் நீங்கிட வழிகாண வேண்டும். அந்தக் காரியத்துக்குப் பொறுப்பான, அமைச்சர் இல்லம் அல்லது அலுவலகம், எனும் இடங்களும், 'மறியல்' செய்வதற்கான இடங்களாகிவிட வேண்டும்.**

*தொகுதியின் நன்மைக்காக, **வாதாட மட்டுமல்ல, கிளர்ச்சியில் ஈடுபட, அதற்காகத் தடியடிபட, சிறைபுக, கஷ்ட நஷ்டம் ஏற்க, உறுப்பினர்கள் துணிகிறார்கள்** என்ற நிலைமை, இனி ஏற்பட்டாகவேண்டும்.*

இந்த முறையின் மூலமாகத்தான் தரக்குறைவான வழிகளால் அரசியல் ஆதிக்கத்தை இழந்துவிடாமல் இருக்கும் போக்கை முறியடித்து மக்களாட்சி முறையின் மாண்பினைப் பாதுகாத்திட இயலும்.

நமக்காக, நமது உறுப்பினர் சட்டசபையிலே வாதாடுகிறார் என்று மட்டும் இல்லங்களில் பேச்சு எழுவது போதாது; நமக்காக நமது உறுப்பினர், ஆட்சியாளர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, சிறையில் தள்ளப்பட்டு, வாடிக்கொண்டிருக்கிறார் என்று உள்ளம் நெகிழ இல்லந்தோறும் பேசிடும் நிலை எழவேண்டும். கழகத்தவர்கள் இனி இதற்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

சென்றமுறை நான் நேர்மையான அரசியல் முறையில் ஆட்சிக் கட்சியினருக்கு நம்பிக்கை இருக்கும் என்று எண்ணி 'தண்டலம் முறை'யைக் கடைப்பிடித்துப் பார்த்தேன்; பலன் ஏற்படவில்லை.

இம்முறை, நாம் நமது முறையை மாற்றிக்கொண்டாக வேண்டும். தொகுதிகளின் நலன்களுக்காக, தேவைப்படும்போது, கிளர்ச்சிகள் நடத்திட நாம் தயாராகிவிடவேண்டும்.

நாடாறு மாதம் காடு ஆறுமாதம் என்பார்களே, அதுபோல, பாதிக்காலம் சிறைச்சாலை பாதிக்காலம் சட்டசபை என்று இருந்தாலும் பரவாயில்லை, என்று துணிந்துவிட வேண்டும்.

சட்டசபை முறை எதற்கு எடுத்தாலும் கிளர்ச்சிசெய்து

தான் தீரவேண்டும் என்றநிலை இல்லாதிருக்க, வாதாடி, விளக்கம்கூறி, மக்களுக்கு நலன்தேட, ஏற்பட்டது. ஆனால் ஆளுங்கட்சியினர், இதனை மதிக்க மறுத்தால், இதன்படி நடக்க மறுத்தால், மிச்சம் இருக்கிற ஒரே வழி, கிளர்ச்சிதான்!! சட்டசபைக்கு கழகம் சென்றுவிடுவதாலேயே, மக்களின் நலன், கிடைத்தால் சட்டசபைமூலம் கிடைக்கட்டும் இல்லையென்றால் நாம் ஏதும் செய்வதற்கு இல்லை, என்று கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து காலந்தள்ள அல்ல! சட்டசபை முறையினால், மக்களுக்குத் தேவையான நலன்களைப் பெறமுடியவில்லை என்றால், கிளர்ச்சியிலும் ஈடுபடவேண்டும் என்ற எழுச்சி உள்ளத்தைப் பக்குவமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

கிளர்ச்சிகள் தேவை என்ற நிலை ஏற்படும்போது உறுதிவேண்டும், ஊர்ப் பகை கூடாது! எதற்கும் கலங்காத நெஞ்சம் வேண்டும், அதேபோது ஆத்திரத்துக்குத் துளியும் இடமளித்து விடாத போக்கு, சிதையாமல் இருக்கவேண்டும். குதிரைகள் வேகமாக ஓட வேண்டும், ஆனால் கடிவாளம் இல்லாமல் அல்ல!!

ஆளுங் கட்சியினர் பொதுத் தேர்தலுக்குச் சில திங்களுக்கு முன்னதாக, பதவிகளைவிட்டு விலகிவிட்டிருந்தால், மக்களை அச்சமூட்டியும் ஆசை காட்டியும் ஓட்டுகளைப் பறித்திட வழி இந்த அளவுக்கு ஏற்பட்டிருந்திருக்காது.

அதிகாரிகளைப் பயன்படுத்தினோம் என்று தகவல் இருந்தால் காட்டுங்கள்; நடவடிக்கை எடுக்கலாம் என்று வாதாடுகிறார்கள், காங்கிரசுத் தலைவர்கள்.

தகவல்கள், ஆதாரங்கள், சான்றுகள், கிடைக்கமுடியாதபடியான சூழ்நிலையேகூட, இவர்கள் பதவியில் இருப்பதால்தான் ஏற்படுகிறது.

தேர்தல் காலத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், தடுத்திடவும் திருத்திடவும், பரிகாரம் தேடி அளித்திடவும், தனியான ஒரு நிர்வாக அமைப்பு எங்கே இருக்கிறது? எவரிடம் முறையிடுவது? எங்கு நீதி கேட்பது, பெறுவது?

அதிகாரத்தைப் பயன்படுத்தும் முறை, அமைச்சரிலிருந்து தொடங்கும்போது, பரிகாரம் தேட, வேறு இடம்?

மருந்திலேயே விஷம் கலந்துவிட்ட பிறகு விஷம் போக்க மருந்துக்கு எங்கே போவது?

பெரிய புள்ளிகளை, ஜாதித் தலைவர்களை, பஸ் முதலாளிகளை, வணிகக் கோமான்களை அழைத்துவைத்து அமைச்சர் நிலையினர் பேசும்போது, அடியவர்கள் போன்றோர் செய்திடும் சிண்டு முடிந்துவிடும் வேலைபற்றி எவரிடம் எடுத்துக்கூறிப் பரிகாரம் காணமுடியும்.

தம்பி! காஞ்சிபுரம் தொகுதியிலே தேர்தல் நேரத்திலே நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று கூறுகிறேன். நமது நீதிநெறி தவறாத மந்திரிகள் இதற்கு ஆதாரம் காட்ட முடியுமா என்று கேட்பார்கள். நேர்மையான வர்கள், காங்கிரசல்லாதார், இந்த மாநிலத்தவரல்லாதார், பொதுவானவர்கள் கொண்ட ஒரு தனிக்குழு, இரகசியமாக விசாரணை நடத்தினால், இதற்கும் இது போன்ற மற்ற பல நிகழ்ச்சிகளுக்கும் மெய்ப்பிக்கும் சான்றுகள் நிச்சயம் கிடைக்கும். நிகழ்ச்சியைக் கூறுகிறேன், கேள், தம்பி!

ஒரு சிற்றூர். அதை அடுத்து, சேரி. இடையிலே, புறம்போக்கு நிலம்; ஊருக்குப் பொதுவானது.

சேரியில் உள்ள மக்களுக்கு இடநெருக்கடி.

புதிதாகக் குடிசைகள் அமைத்துக் கொள்ள ஏற்ற இடம் அந்தப் புறம்போக்கு. அதற்காகச் சேரி வாழ்பவர் பலமுறை வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற பதிலன்றி வேறு இல்லை.

தேர்தல் நெருங்கிற்று; பதினைந்து இருபது நாட்கள் உள்ளன. அதிகாரி கிளம்புகிறார். அதுவரையில் அக்கரையற்று இருந்தவர், கையில் ஏடெடுத்து, கண்களில் கனிவு காட்டி, சேரி செல்கிறார்; பழங்குடி மக்களிடம் பரிவாகப் பேசுகிறார். பரிதாபமான நிலைமை! இருக்க இடம்கூடக் காணோமே! ஏன் இந்தக் குறையினை உங்கள் எம். எல். ஏ. போக்கவில்லையா என்று கேட்கிறார். அவரிடம் சொன்னோம், உங்களிடம் சொன்னதாகச் சொன்னார் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

மறுக்கவும் இல்லை! ஒப்புக்கொள்ளவும் இல்லை அதிகாரி!

போனது போகட்டும். இப்போது உங்களுக்கு நல்லகாலம் வருகிறது. கஷ்டம் போய் விடும். அதோ இருக்கிறதே, புறம்போக்கு நிலம், அவ்வளவும் உங்களுக்குத்தான். மனு எழுதிக் கொடுங்கள் என்கிறார், அதிகாரி.

மனு பெறுகிருர்; கையொப்பம் இடுகிருர்கள்; கைகூப்பி நிற்கிருர்கள்.

இந்த முறையாவது, நன்மை கிடைக்குமா, என்று கேட்கிருர்கள்.

கிடைக்கும்...என்று இழுத்தார்ப்போல் பேசுகிருர் அதிகாரி.

பயப்படுகிருர்கள், சேரி வாழ்வோர்.

புன்னகை காட்டுகிருர் அதிகாரி; சுற்றுமுற்றும் பார்க்கிருர்; பார்த்துவிட்டு, புறம்போக்கு நிலத்தில் மனைக்கட்டு, வீடுகட்டிக் கொள்ள கடன் தொகை எல்லாம் கிடைக்கும், காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்ருல்; தேர்தல் வருகிறது, காங்கிரசுக்கு ஓட்டுப்போடுங்கள், மனைக்கட்டு கிடைக்கும் என்கிருர்.

காங்கிரஸ்காரர் அப்படிச் சொல்லியிருந்திருந்தால், 'ஓட்டு' வாங்கப் பேசுகிருர் என்று எண்ணிக்கொள்வார்கள்; சிலர் கேட்கவும் செய்வார்கள். ஆனல் பேசுபவரோ, அதிகாரி! என்ன சொல்லமுடியும்?

வாக்குக்கொடுத்து அனுப்பிவைத்தார்கள், அதிகாரிக்கு!

அதிகாரி, சேரி வாழ்வோரிடம் காங்கிரசுக்கு ஓட்டுப்போடச் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டு, புறம்போக்கு நிலத்தை மனைக்கட்டுகளாக்கித் தருகிறவேலையில் ஈடுபட்டார் போலும் என்றுதானே நினைத்துக்கொள்கிருய். தம்பி! அவர் பெரிய ஆள்! சேரி ஓட்டுகளைக் காங்கிரசுக்குச் சேர்த்துவிட்டது போதும் என்று திருப்தி அடைந்துவிடவில்லை. ஊருக்குப் போனர்.

ஊர்மக்கள் அதிகாரியை வரவேற்ருர்கள்.

ஊரிலே முக்கியமானவர்களை அருகே அழைத்தார்.

என்ன ஆட்களய்யா நீங்கள்? விவரம் தெரியாதவர்களாக இருக்கிறீர்களே!—என்ருர்.

ஊர்ப் பெரியவர்களுக்குத் திகைப்பு—என்னசொல்லுகிருர் என்று விளங்காததால்.

ஊர்ப் பொதுச் சொத்து புறம்போக்கு. இது தங்களுக்கு வேண்டும் என்று சேரிக்காரர்கள் மனு கொடுத்துவிட்டார்கள்.

இதோ மனு! மனைக்கட்டுகள் ஆகிவிடும், உங்கள் புறம்போக்கு, என்ருர்.

ஐயோ! அது எங்களுக்குவேண்டுமே; மேய்ச்சல் இடம் அதுதானே, என்று கூறிக் கைபிசைந்துகொண்டார்கள் ஊர்ப் பெரியவர்கள்.

வாயை மூடிக்கொண்டுகிடந்தால், எப்படி ஐயா! காரியம் நடக்கும். புறம்போக்கு எங்களுக்குத் தேவை, சேரிக்காரருக்குத் தரக்கூடாது என்று மறுப்பு மனு தயாரித்துக் கொடுங்கள் என்ருர் அதிகாரி.

மனு தயாரித்தார்கள், பெற்றுக்கொண்டார் அதிகாரி.

புறம்போக்கு ஊருக்கு இருக்கும்படி செய்யவேண்டும் என்று கெஞ்சுகிருர்கள் ஊரார்.

என்னல் என்னய்யா செய்யமுடியும்... என்று கூறிவிட்டு, அதிகாரி மெல்லிய குரலிற் பேசுகிருர்; காங்கிரசுகட்சி ஆட்சிக்கு வந்தால்தான், உங்கள் காரியம் நடக்கும், அதனுல் காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டாகவேண்டும். காங்கிரசுக்கு ஓட்டுப்போடாவிட்டால், புறம்போக்கு சேரிக்குத்தான். சொல்லிவிட்டேன், பிறகு உங்கள் இஷ்டம் என்ருர் அதிகாரி.

தம்பி! என்ன நடைபெற்றிருக்க முடியும் என்பதை எண்ணிப்பார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! புறம்போக்கு தருகிறேன் என்று சொல்லிச் சேரி மக்களின் ஓட்டு! புறம்போக்கு ஊராருக்கே சொந்தம் என்று செய்து தருகிறேன் என்று கூறி ஊர் மக்கள் ஓட்டு; மொத்தத்தில் 600-ஓட்டுகள் காங்கிரசுக்கு—அதிகாரியின் போக்கினல்!!

இதற்கு ஆதாரம் காட்டு என்ருல், அதிகாரி ஒப்புக்கொள்வாரா? ஏதுமறியாதவர்போல வருவார், இரண்டு மனுக்களையும்காட்டுவார்; தந்தார்கள், பெற்றுக்கொண்டேன், ஓட்டு இன்னருக்குத்தான் போடவேண்டும் என்று நான் சொல்லவே இல்லை என்பார்.

ஊரார் மட்டும் என்னசெய்யமுடியும்? அதிகாரிக்குக் கோபம்வருமே! ஆகவே அவர்கள் என்போன்ருரிடம் சொல்லுவார்களே தவிர, பிறகு மென்று விழுங்கி விடுவார்கள், நமக்கேன் அதிகாரிகளின் பொல்லாப்பு என்று.

இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன; பல தொகுதிகளில்.

ஆட்சியில் இருந்துகொண்டு, தேர்தலில் ஈடுபடும் வரையில், இதுபோன்ற அலங்கோலங்கள் இருக்கத்தான் செய்யும்.

அதனால்தான் தம்பி! பலமுறை நான் கூறினேன், பதவியைவிட்டு விலகி, வெறும் காங்கிரசுக்காரராக, தேர்தல் வேலையில் ஈடுபடுங்கள், மக்கள் உமக்கு அப்போது எந்த அளவுக்கு ஆதரவு தருகிறார்கள் என்பது புரிந்துவிடும் என்று சொன்னேன். தண்ணீரைவிட்டு வெளியே வருகிறதா முதலை! பதவியைவிட்டு விலக மனம் வந்ததா காங்கிரசாருக்கு! பதவியில் இருந்துகொண்டே தேர்தலுக்கு நின்றதால்தான் பெரிய புள்ளிகளின் படைவரிசை துணைபுரிந்தது; அள்ளி அள்ளிப் பணம்கொடுக்க முதலாளிகள் வந்தார்கள்; அதிகாரிகள் வரம்பு மீறிச்சென்று காங்கிரசுக்கு வேலை செய்தார்கள்.

தம்பி! இவ்வளவு இடுக்கண்களையும் சமாளித்துப் பெற்றிருக்கிறோம், வெற்றிகளை, இந்தத் தேர்தலில்.

சம்மட்டி இல்லை, பாறையை உடைக்க; கரமே சம்மட்டி என்று, ஓங்கிக் குத்திக்குத்தி, இரத்தம் கசியக்கசியக் குத்தி, பாறையை உடைத்திடுவது போலக் காங்கிரசு எதேச்சாதிகாரத்தை, எவ்வளவோ வசதிக் குறைவுக்கிடையில், கழக அணிவகுப்பு எதிர்த்து நின்று வெற்றி பெற்றுக்கொடுத்தது.

மரத்தின்மீது பாதுகாப்புக்காகப் பரண அமைத்துக்கொண்டு, சுழல் துப்பாக்கியால், புலியைச் சுட்டுக்கொல்லும் வேட்டை முறையிலே காணப்படும் வீரத்துடன், பட்டி நோக்கிப் பாய்ந்துவரும் புலியின் வாலைப் பற்றித் தூக்கிச் சுரகரவெனச் சுற்றிப் பாறையின்மீது போட்டடிக்கும் வீரத்துடன் ஒப்பிட்டுப்பார்!

குண்டடிபட்ட புலி, செத்த பிறகுகூட, குற்றுயிராக இருக்குமோ என்று அஞ்சி, மரத்தைவிட்டுக் கீழே இறங்கப் பயப்படும் 'சிகாரி'யுடன், உடலெங்கும் இரத்தக் காயத்துடன் நின்றபடி, பலமான அடிதான், ஆனால் புலி சாகவில்லை; ஓடிப்போய் புதருக்குள் புகுந்துவிட்டது என்று கூறிடும் மாடோட்டும் இளைஞனை ஒப்பிட்டுப்பார்!

அஃதேபோல, பலபல இலட்சங்களைக் கொட்டி. பல்வேறு அக்ரம வழிகளைக் கையாண்டு 57 இலட்சம் வாக்குகளைப் பெற்ற காங்கிரசுடன், பணப்பலத்தால் அடிபட்டு, அதிகார பலத்தால் அடியுண்டு, நெருக்கடிகளிலே சிக்கிய நிலையிலும் 34 இலட்சம் வாக்குகளைப் பெற்ற நமது கழகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால்தான், அறுவடையின் அருமையும் அணிவகுப்பின் பெருமையும் விளங்கும். வாழ்த்துகிறேன் தம்பி! அரும்பெரும் வெற்றியினை இத்தனை வசதிக் குறைவுக்கு இடையிலே பெற்றளித்த அணிவகுப்பினை.

தம்பி! நான் அந்த அணிவகுப்பின் பெருமையினை அறுவடையைக் கண்டு மட்டுமல்ல, மற்றவர்கள் இந்த அறுவடைபற்றி என்னென்ன கூறுகிறார்கள் என்பதனைக் கேட்டு, மேலும் விளக்கமாக உணரமுடிகிறது.

புரியவில்லையே என்பவர்களும்,

ஆச்சரியம், ஆனால் உண்மை, என்பவர்களும்,

பிரச்சார பலத்தால் பெற்ற வெற்றி என்பவர்களும்,

எவரெவரோ உதவி செய்ததால் பெற்ற வெற்றி என்று கூறுவோரும்,

ஐயயோ! இது ஆபத்து என்று அலறுபவர்களும்,

அடுத்த முறை என்ன ஆகுமோ என்று அஞ்சுபவர்களும்,

திக்குக்குத் திக்கு, நாள்தோறும், நாம் பெற்ற வெற்றி பற்றிப் பேசுகிறார்கள்.

பண்டித நேருவோ, பட்டாளத்தையே காட்டுகிறார்!! அடுத்த கிழமை, அது குறித்து.

அண்ணன்,

அண்ணாதுரை

# வஞ்சிக்கப்பட்ட வரதன்

—[ப. இளவழகன்]—

காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டு மணிக்கு மேலான பின்பும் இரைச்சலும், ஆரவாரமும் குறையாத மாலூர் நகரத்தின் 'நெடுங்கடை வீதி' கொஞ்சம் கொஞ்சமாக அமைதியப்பன் ஆட்சிக்கு அடங்கிக் கொண்டிருந்தது. அங்கே கட்டிடமொன்றின் உச்சியிலே அமைக்கப்பட்டிருந்த கடியாரத்தின் முட்கள் மணி ஒன்பதரையைக் காட்டின.

அந்த நெடுங்கடை வீதியின் திருப்பமொன்றிலே, "சைகிள் ரிக்ஷாக்கள் நிற்குமிட"த்திலே, வாட்டம் கப்பிய முகத்துடன் காலையிலேயிருந்து, தான் உழைத்துப்பெற்றிருந்த ஊதியத்தை எண்ணினான் வரதன். ஒருமுறைக்கு இருமுறை--மூன்றாவது முறையாகவும் எண்ணினான். எத்தனைமுறை எண்ணினாலென்ன; அன்றெல்லாம் அவன் ஓட்டிய ஆறு சவாரிக்குக் கூலியாகக் கிடைத்த இரண்டு ரூபாய் அதிகமாகக்கூடிவிடும்?

சைகிள் ரிக்ஷாவின் உரிமையாளருக்கு வாடகைப் பாக்கியே இரண்டு ரூபாய் கட்டவேண்டுமே! இன்றைக்குக்கட்டாவிடில், நாளைக்கு மீண்டும் வண்டியைத் தரமாட்டாரே! வாடகைப் பாக்கியைக் கட்டிவிட்டாலோ இன்றைக்கு வயிற்றின்மீது ஈரத் துணியைப் போட்டுக்கொள்ள வேண்டியிருக்குமே! தான்மட்டும் வேண்டுமானால் அப்படி இருந்துவிடலாம்; ஆனால், தன்னை நம்பி எதிர்பார்த்து இரண்டு பிள்ளைகளும், வயிற்றிலே மற்றொரு மழலையோடு தன் மனைவியும் காத்திருப்பார்களே! --என்றெல்லாம் பற்பல விதமான எண்ண அலைகள் வரதனின் உள்ளக் கடலிலே எழும்பி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன. இன்னும் யாராவதொரு சவாரி கிடைத்தால் போதும்,

இன்றிரவை---பொழுதைக் கழித்து விடலாமென்று ஏக்கப்பார்வையை அந்த வீதியின் இருபுறங்களிலும் செலுத்திக்கொண்டிருந்தான்.

இந்தச் சைகிள் ரிக்ஷா வண்டி யோட்டும் தொழில் வரதனுக்கு ஏனோ பிடிக்காமல்தான் இருந்தது. ஆனால் அந்தத் தொழிலை அவன் ஏளனமாய்க் கருதியவனுமல்ல. ஒரு மனிதனை உட்காரவைத்து மற்றொரு மனிதன் மாடுபோல் இழுத்துச் சென்ற கைரிக்ஷா ஒழிக்கப்பட்டுச், சிறிது மாற்றமடைந்த தொழிலாகச் சைகிள் ரிக்ஷா ஓட்டும் தொழில் இருந்தபோதிலும், பாழான பழைய வாழ்க்கையிலிருந்து கிஞ்சித்தும் மாறுதலைக் காணமுடியவில்லை அவனால்.

எண்ணச் சுழல்களுக்கிடையில் மிதந்துகொண்டிருந்த வரதன், "என்னப்பா ரிக்ஷா, மேட்டுத்தெருவரைக்கும் வர்றியா" என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

வெண்மையான வேட்டிகட்டி, 'மைசூர் சில்க்'கில் தைக்கப்பட்ட சட்டையணிந்து, கையிலே தூக்க முடியாதளவு சுமையைத் தூக்கிக் கொண்டிருப்பதுபோல் கனத்த பெட்டியொன்றை வைத்துக் கொண்டு. ஏறத்தாழ நாற்பது வயதுடைய ஆசாமியொருவர் நின்று கொண்டிருந்தார். மதிப்பிற்கும், மரியாதைக்கும், மாண்பிற்கும் உரியவரைப் போன்ற தோற்றத்துடன் காணப்பட்டபோதிலும், அவரிடம் சிறிது பரபரப்பும்--பதட்டமும் காணப்பட்டது.

"மேட்டுத் தெருவுக்குங்களா?" என்று கேட்ட வரதன் அக்கம்பக்கத்தையும் பார்த்துக்கொண்டான். தன்னுடையதைத் தவிர்த்து ஒரேயொரு சைகிள் ரிக்ஷாதான் இருந்தது. அதிலும் யாரையோ திட்டுவதும், கேலி புரிவதுமாகத் தூக்கத்தில் பிதற்றிக் கொண்டு, அந்த ரிக்ஷாவின் மெத்தையிலேயே சாய்ந்துகொண்டு உறங்கிக்கொண்டிருந்தான் அதை ஓட்டுபவன். தன்னைத் தவிர இந்தச் சவாரிக்கு போட்டிக்கு யாருமில்லை என்பதை உணர்ந்தபோதிலும், நியாயமான கூலியைத்தான் கேட்க விரும்பியது அவன் உள்ளம். இப்போது மட்டுமல்ல, எப்போதும் அவன் உள்ளம் அப்படித்தான்! வந்தவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"மணி பத்துக்குமேலே ஆகப்போவுது; வாடகையைப்பத்தி ஒண்ணும் யோசிக்காதே, நீ கேட்கப்போறதை விட அதிகமாவே தர்றேன்; ஆனால் கொஞ்சம் சீக்கிரமாகக் கொண்டு போனாப் போதும்; என்ன சொல்றே?" என்று கேட்டார் அந்த பெட்டி ஆசாமி.

"வந்து குந்துங்க.... ஒரு நொடியிலேகொண்டுபோய் விட்டுடுறேன்'' என்று கூறியவாறே உட்காரும் மெத்தையை ஒரு தட்டுத் தட்டி, படிந்திருந்த தூசியை ஊதினான். தீக்குச்சியொன்றைக் கிழித்து ரிக்ஷாவின் விளக்கைப் பற்றவைத்துவிட்டு,அவர் கையிலிருந்த பெட்டியை வாங்கினான். உண்மையிலேயே அந்தப் பெட்டி கனமாகத்தான் இருந்தது.

வாடகைப் பாக்கிக்குப்போக,செலவுக்கும் ஒரு சவாரி கிடைத்துவிட்டதேயென்ற தெம்பில், வண்டியைக் கொஞ்சம் வேகமாகவே மிதிக்கலானான் வரதன். வண்டியை மிதிக்கும் சிரமம் தெரியாமலிருப்பதற்காக வாடகைக்காரர்களிடம் பேச்சுக் கொடுப்பது வரதனிடத்திலிருந்த ஒரு பழக்கம். "என்னங்க உங்களுக்கு இது சொந்த ஊருங்களா...?"

ஆனால் அவரோ அந்த இருட்டில் பின்புறமாக---சாலையின் மீது எதையோ---யாரையோ ஊடுருவிப் பார்ப்பதைப்போல் காணப்பட்டார். வரதனின் கேள்வியை அரைகுறையாய்ச் செவியிலேற்ற அவர், "என்னப்பா.... என்ன.... என்ன கேட்டே?" என்றார்.

"ஏழைகளுக்கெல்லாம் நல்வாழ்வு கிடைக்கணும் அப்படீன்னுட்டுத் தான் நம்ப அரசாங்கம் எவ்வளவோ முயற்சி பண்ணுது. திட்டங்களைப் போடுது. சோஷலிச சமுதாயத்தை உண்டாக்க வேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டுக்கிட்டு வருது. உங்களுக்கெல்லாம் சுகவாழ்வு நிச்சயமாய்க்கிடைக்கும். பொய்மையை ஒழித்து மெய்ம்மையாக வாழ்வது தான் மனிதநீதி"என்றெல்லாம் வரதனிடம் உபதேச மொழிகளாகவே உதிர்க்கத் தொடங்கிவிட்டார். வண்டியிலமர்ந்திருந்தவர்.

இதுவரை அப்படித்தாங்க நடந்து கிட்டுவர்றேன்; இனிமேலும் அப்படியே நடப்பேன் அழுத்தமிருந்தது வரதனின் பேச்சில்.

''காந்தியாருடைய சுய சரித்திரத்தைக் கூறும் 'சத்திய சோதனை' அப்படீன்னு ஒரு புத்தகம்; அதை ஒரு ஆயிரம் வாங்கி ஜனங்களுக்கு இலவசமாவே குடுக்கணும்னு ஒரு யோசனையைக்கூடவெச்சிருக்கிறேன். உலகத்திலே பொய், களவு, ஏமாற்றுதல் இதெல்லாம் அதிகமாய்ப் போயிடுச்சி...." வண்டியில் அமர்ந்திருந்தவரின் பேச்சு ஏனோ தடுமாற்றத்திற்குள்ளானது; பாதியிலேயே நின்றுவிட்டது, பின்னால் ரிக்ஷாவை நோக்கி போலீசுகாரரொருவர் வேகமாக வந்துகொண்டிருந்தார். வண்டியில் அமர்ந்தவர், 'ரிக்ஷாவை கொஞ்சம் நிறுத்துப்பா' என்றார். வரதன் நிறுத்தினான். வாடகைக் கூலியைத்தர தன்னிடத்தில் சில்லரை இல்லையென்றும், அருகிலிருந்த உணவு விடுதியில் நோட்டுக்குச் சில்லரையை மாற்றிக் கொண்டு வந்துவிடுவதாகவும் கூறிவிட்டு, வரதனுடைய பதிலையும் எதிர்பாராமல் வண்டியைவிட்டு இறங்கி ஓடினார் உணவு விடுதியை நோக்கி.

ஐந்துநிமிடமாகி, அரைமணியாகி, ஒரு மணியும் முடிந்துவிட்டது. சில்லரை மாற்றிக்கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டுப் போனவர் இன்னும் வரவில்லை. அவர் ஓடிய பக்கமிருந்த உணவுவிடுதியும் மூடப்பட்டு விட்டது.

இந்த நேரத்திலே சில்லரைக்கு வேறு எங்கே போகமுடியும்; எங்கே போனாலென்ன, பெட்டி ரிக்ஷாவில் தானே இருக்கிறது; சில்லரை மாற்றிக்கொண்டு வந்துதானே ஆகவேண்டும் என்று தனக்குத்தானே கூறிக் கொண்டு, முழு நம்பிக்கையோடு அதே இடத்திலேயே நின்றுகொண்டிருந்தான் வரதன்.

பாவம்; பரிதாபத்திற்குரியவன்! ரிக்ஷாவின் பின்னால் வந்துகொண்டிருந்த போலீசுகாரர், தன்னைப் பிடிக்கத்தான்வருகிறார் என்று கருதி, இதுகாறும் உபதேசம் புரிந்து கொண்டு வண்டியிலே வந்துகொண்டிருந்தவர் சில்லரை மாற்றிக் கொண்டு வருகிறேன் என்றொரு பொய்யைக் கூறிவிட்டு ஓடிப்போய் விட்டதையும், அவர் விட்டுச்சென்றிருக்கும் பெட்டியிலே பெங்களூர் சரக்கும் மேல்நாட்டு மதுவகைகளும் நிரப்பிவைக்கப்பட்டிருப்பதையும் இன்னும் வரதன் அறியவில்லை! அறிந்தால் மட்டுமென்ன......?

✱

முகவரி:

**வேணு**

" நியூ ஜஸ்டிஸ் "

6, சாமிநாதன் தெரு,

மேற்கு மாம்பலம், சென்னை-33

# வாழ்ந்த குடி

—[கனகு]—

## 2. தோழமை எனும் தளை

அன்று மாலை வாசு மட்டும் வீட்டிலிருந்தான்—அவன் தந்தை அங்கு போனபோது. கார்த்திகேயன் அங்கு இல்லை. தன் மகனிடம் கார்த்திக்காகக் கடிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர் அன்று சற்று முன்னதாகவே வந்தார். "எங்கே அந்தப் பையன் கார்த்தி?" என்று வரும்போதே வினவிக்கொண்டுவந்தார்.

"அவன் வீட்டுக்குப் போய்விட்டான்!"

"பாவம் நொடித்துப்போன குடும்பம் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு அவனைத் தவிர வேறு யாருமில்லை. நல்லவேளையாக என்னிடம் வந்தான். நான் அவனுக்கு நல்லவேலையாகஒன்றைக்கொடுத்து ஆதரித்தேன். நீ இடையில் வந்து அவனை வேலைக்கு வரவேண்டாமென்று தடுத்து அனுப்பிவிட்டாயே!"

"ஏன் அப்பா, உண்மையில் நீங்கள் கார்த்திக்கு உதவிசெய்ய முடியாமற்போய்விட்டதே என்பதற்காகவா இப்போது வருந்துகிறீர்கள்?"

"பின்னே?"

"நான் சொல்கிறேன் — நீண்ட நாளாக அந்த வேலைக்கு நல்லவனாக ஒருவன் கிடைக்கவில்லை. அதற்காக நீங்கள் வருத்தமுற்றுக் கொண்டேகூட இருந்திருக்கிறீர்கள்; இப்போது கார்த்தி வந்தான்; அந்த வேலைக்கு அவன்தான் சரியான ஆள்—நம்பகமானவன், நல்லவன் என்று நீங்கள் முடிவு கட்டினீர்கள்! உடனே அவனிடம் அந்த வேலையை ஒப்படைத்தீர்கள். நீங்கள் எதிர்பார்த்தபடியே அவனும் நல்லவனாக, திறமையுள்ளவனாக அமைந்துவிட்டான். இடையில் நான் வந்து அவனை அழைத்துக்கொண்டு வந்துவிடுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் எதிர்பார்க்காததை நான் செய்துவிட்டேன். உங்கள் கோபம் எல்லாம் இப்போது என்மேல்தான் இருக்கும்!"

"பிள்ளையைப் பார்! ஒழுங்குதான் உன் பேச்சு! போடா — பேத்தல்காரா!!"

"அப்பா, அப்பா!"

"என்னடா?"

"நானேயிருந்து நான் அந்த வேலைக்குப் போய்விடலாமென்று பார்க்கிறேன். இனிமேல் எனக்குக் கல்லூரியும் வேண்டாம். படிப்பும் வேண்டாம்!"

"என்னடா உளறல் இது?"

"ஆமப்பா, நான் படித்து என்ன செய்யப்போகிறேன்? பட்டம் பெற்று என்ன பயன்பெறப்போகிறேன்? பட்டம் பெற்று வெளியே வந்தால்,எண்பதோ தொண்ணூறோ; நூறோ அல்லது நூற்றைம்பதோ வாங்கக்கூடிய ஒரு வேலை கிடைக்கும். அதுவும் நானாக இருப்பதனால் கொஞ்சம் சுலபமாகக் கிடைக்கும். ஏனென்றால், நீங்கள் இருக்கிறீர்கள். மந்திரி வரையிலே போய்ச் சிபாரிசு கொண்டு வருவீர்கள். எனக்கு வேலை கிடைக்கும். மற்றவர்கள் எல்லாருக்கும்— எவ்வளவுதான் திறமையும், படிப்பும் இருந்தாலும்—அப்படி வேலைகிடைக்காது. இப்படிப் பட்ட தாழ்வு நிலையிலே இருக்கின்ற இந்தப்படிப்புக்கு ஏன் இத்தனை பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்? படிக்காமலே எத்தனையோ பேர் மேதைகளாக மாறிக்கொண்டிருக்கும்போது—அந்தப் படிக்காத மேதைகள் சொல்வதே அறமொழியாகவும், அறிவு மொழியாகவும் போற்றப்பட்டுக்கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கும்போது, நாட்டிலே படித்தவர்கள், படிக்காதவர்கள், அறிந்தவர்கள், அறியாதவர்கள், நல்லவர்கள், பொல்லாதவர்கள், யார், எந்தக் கதியானாலும், எது எப்படி மாறினாலும், 'நமக்கு இலாபம் கிடைக்க வழியிருக்கின்றதா? அது ஒன்றேபோதும்.' என்று எண்ணமிடுவோரின் தொகை பெருகிக் கொண்டிருக்கும்போது—மொத்தத்தில் உயர்ந்த படிப்புக்கு 'மவுசே' இல்லாமற் போய்க்கிடக்கும்போது, நான் மட்டும் நல்ல படிப்பு, உயர்ந்த படிப்புப் படிக்கிறதால் என்னபயன்? ஆகவே, நானும் படிப்பதை விட்டுவிட்டு இப்படி வேலையில் உட்கார்ந்துவிடலாம் என்று முடிவுகட்டுகிறேன்."

"என்னடா இதெல்லாம்! என்றைக்குமே இல்லாமே இப்படி எதை எதையோ உளறுகிறாய்! வீணே பிதற்றுகிறாய்! உனக்கென்ன பித்தம் தலைக்கேறிப்போய்விட்டதா? யாரோ படிப்புவாசனை இல்லாதவனை யார் யாரோ வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் எல்லாரும் சேர்ந்துகொண்டு மேதையென்று சொன்னால், உனக்கென்ன குறைந்துபோகிறது? சொல்லட்டுமே! அவர்கள் சொல்கிறார்கள். அதிலே அவர்களுக்கு இலாபம் இருக்கிறது. இலாபம் — வாசி — வந்துகொண்டிருக்கும் வரையிலும் எதையாவது சொல்லித்தானே தீர வேண்டும். சொல்லப்படுகிறவர்களை விட-இந்த மாதிரியான செய்திகளில் —சொல்கிறவர்கள் யாரென்றுதான் நீ பார்க்கவேண்டும். பார்! அவர்கள் எல்லாரும் யாராக இருக்கிறார்கள்? சிலர் வணிகர். சிலர் அகப்பட்டதைச் சுற்றும் ஆண்டியப்பர், மற்றவர்கள் எல்லாம் சமயத்துக்குத் தகுந்தாற்போல் வேடம் போட்டுப் போட்டுப் பழகிப்போனவர்கள். படிக்காத மேதை என்று மட்டுமா சொல்வார்கள் அவர்கள்! இன்னும் நீ கனவில்கூடக் கருதாத எதை எதையெல்லாமோ சொல்வார்கள் 'இவர்தான் அமைதியின் தந்தை' என்பார்கள். உலகுக்கு அறிவொளி காட்டவந்த பேரொளி என்பார்கள். உலகுய்வதற்கென்று வந்துதித்த ஆண்டவனின் புதிய அவதாரம் என்றுகூடச்சொல்வார்கள்! இதெல்லாம் வியாபாரம். சந்தைக் கடை

யில் நீ பார்த்திருப்பாயே, சில வியா பாரிகளை!—அழுகிப்போன மாம்பழங் களையும், புழுத்துப்போன மாம்பழங் களையும் குவித்துவைத்துக்கொண் டிருப்பார்கள் அவர்கள். ஆனால், அழுகிப்போன பகுதிகளையும், புழுத் துப்போன பகுதிகளையும் பார்ப்போர் கண்ணுக்குத் தென்படாத வகை யில் மறைத்து வைத்துக்கொண் டிருப்பார்கள். அப்படிப்பட்ட வியா பாரிகளின் குரல்தான் அந்தச் சந் தைக் கடையிலேயே உரத்துக் கேட்கும். "ஓடி வா! ஓடிவா! அரு மையான நீலம்! சேலத்திலிருந்து இன்றுதான் இறக்குமதியானது! தின்னத் தின்னத் தெவிட்டாதது! தேனைவிடத் தித்திப்பானது! ஓடிவா, ஓடிவா! போனால் வராது! பொழுது போனால் தங்காது!" என்று கூவு வார்கள். அவர்கள் கூவிக் கூவிச் சொல்வதெல்லாம் உண்மையாகத் தான் இருக்கலாவென்று சிலர் நம்ப லாம். அல்லது பலரேகூட நம்ப லாம்—சந்தை அனுபவம் இல்லாத காரணத்தால். பலரோ, சிலரோ நம்பிவிடுவதால் அந்தக் கூக்குரல் உண்மையென்று ஆகிவிடுமா?"

"அப்படியானால் படிப்பு முக்கிய மென்று நீங்கள் ஒத்துக்கொள்கிறீர் கள், இல்லையா?"

"ஒத்துக்கிறதாவது! இது எனக் குத் தெரியாதா என்ன?"

"படிப்பு முக்கியம் — எனக்கு மட்டுந்தானா? எல்லோருக்குமா?"

"என்னடா தம்பி, இன்னிக்கு நீ கேட்கிற கேள்வியெல்லாம் விநோத மான கேள்வியாக இருக்குது! படிப்பு வந்து ஒருத்தருக்கு மட்டும் சொந்தமில்லே! அது எல்லாருக் குமே சொந்தம். ஒருத்தர்தான் படிக் கணும்! ஒருத்தர் படிக்கக்கூடா துன்னு இல்லே!"

"மெய்யாக அப்படிச் சொல்கிறீர் களா அப்பா?"

"இதிலே மெய்வேறே, பொய் வேறேயா?"

"அப்படியானா நான் மட்டும் படிப்பதனால் என்ன அப்பா பிரயோ சனம்? என்னுடன் படித்த கார்த்திக் குப் படிக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டதே!"

"நான் அப்பவே நினைச்சேன், நீ இதைத்தான் சொல்லவர்றேன்னு. பாவம் அவன் கொடுத்துவைச்சது அவ்வளவுதான். அதோட அவன் விவரம் தெரிந்த பையன். திறமை யுள்ளவன்; நல்லவன். எப்படியும் அவன் பிழைச்சுக்குவான்."

"அவன் பட்டப்படிப்பை முடித்து விட்டால் இன்னும் நல்லதில்லையா அப்பா!"

"நல்லதுதான்!"

"ஏன் அவன் படிக்கக்கூடாது?"

"இந்தக் கேள்வியை என்கிட்டே கேட்டு என்னடா செய்யறது?"

"அப்பா, அப்பா!"

கனிந்து, குழைந்துகொண்டு விளித்தான் வாசு.

"என்னடா தம்பி?"

"கார்த்தியையும் என்னோடு படிப் பதற்கு அனுப்பவேண்டுமப்பா. இன் னும் ஒரே ஒரு வருடம். இந்த ஒரு வருடமும் அவன் கல்லூரிப் படிகளை மிதித்து வந்துவிட்டால்தான், அவ னால் தேர்வில் உட்கார முடியும். தேர்வில் அவன் நிச்சயம் வெற்றி பெறுவான். பின்னர் பட்டம்பெற்ற வன் ஆகிவிடுவான்."

"அனுப்பணும்னு! என்னை அனுப் பச் சொல்றியா? அதுக்கு ஏகப் பட்ட பணம் செலவாகுமே! நீ வேறே படிக்கணும்."

"வேணுமானா கார்த்திக்காக நான் கல்லூரிக்குப் போகாமல் நின்றுவிடுகிறேன். எனக்குப் பதிலா அவனைக் கல்லூரிக்கு அனுப்பி வையுங்கள்."

"உனக்குப் பதிலா! — நல்ல பேச்சடா இது தம்பி! அப்படியானா நீ படிக்க வேண்டாமா?"

"நானும் படிக்கணும்தான். ஆனால் நான் படிக்கவேண்டும் என் பது அவ்வளவு அவசியம் இல்லே! ஏனென்றால், நான் பட்டம்பெற்ற பிறகு, அந்தப்பட்டத்தை வைத்துக் கொண்டு வேலை தேடப்போவ தில்லை. நீங்கள் என்னை வேலைக்கு அனுப்பமாட்டீர்கள்! ஆனால்..."

"நல்லாச் சொன்னியே! நீ என்னமோ இன்னொருத்தன் கிட்டே போய் கைகட்டிச் சேவகம் பண்ற முறையிலே வேலைக்குப் போக வேண்டாம் என்பதுதான் என் எண்ணம். ஆனால், கவர்மெண்டிலே முதல் மந்திரி முதல்கொண்டு எல் லாருமே நமக்கு வேண்டியவங்க. அவங்களிலே யார் மூலமாகவாவது உனக்கு ஒரு பெரிய வேலை கெடைச்சா, அதுக்குக்கூடவா உன்னைப் போகவெண்டாமென்று சொல்லப்போறேன். ஆனால்......

ஆனால், நான் ஏதாவது ஒரு வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டுமென்று ஒரு கட்டாயம் இல்லை. அதேசமயம் கார்த்தியின் நிலைமை வேறு. அவன் வேலைக்குப் போய்த்தான் ஆகவேண்டும். வேலை இல்லையென்றால் அவனுக்குச் சோறு இல்லை. அவன் குடும்பத்துக்குச் சோறு இல்லை. எல்லாருக்கும் வாழ்வு இல்லை. ஆகையால் என்னை விட அவனுக்குத்தான் வேலை மிக மிக அவசியம். அவனுக்கு அந்த வகையிலே உதவுவது நம்மைப் போன்றவர்களின் கடமையென்று கூட நினைக்கிறேன் அப்பா!"

"அதனாலேதான் அவனுக்கு என் கிட்டே ஒருவேலை போட்டுக்கொடுத் திருக்கிறேன்!"

"என்ன வேலை அப்பா அது! அந்த வேலையிலே ஏதாவது நிரந் தரம் இருக்கிறதா? அதோடு சம் பளம் நீங்கள் என்ன போட்டுக் கொடுக்கப்போகிறீர்கள்? அதிக மாகப் போனால் நூறு ரூபாய் போட்டுக் கொடுப்பீர்கள்."

"அடேயப்பா! நூறா? இதுவரைக் கும் அந்த வேலைக்கு ஐம்பதுக்கு மேலே கொடுத்ததுகிடையாது. வேணுமின்னா கார்த்திக்காக எழுபத் தைந்து ரூபாய் தரலாம்!"

"பார்த்தீர்களா — நூறு ரூபாய் கூடச் சம்பளம் இல்லை. கார்த்தி யின் குடும்பத்தைப்பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். ஒரு காலத்திலே — ஒருகாலத்திலே என்ன — ஒரு வருடத்துக்கு முன்புவரை அவர் களும் நம்மாதிரி நல்ல நிலையிலே இருந்தவர்கள்தான். யானை படுத்தா லும் குதிரை உயரம் என்று சொல் வார்கள். அந்தக் குடும்பத்துக்கு ஒருமாதச் செலவுக்கு நூறு ரூபாயே காணாதது. இந்த நிலையிலே நீங்கள் அவனுக்குக் கொடுக்கப்போவது எழுபத்தைந்து ரூபாய்! — அதுவும் நிரந்தரம் இல்லாத வேலை. வேறு வேலை வேண்டுமானால் அவன் பட்டப் படிப்பை முடிக்க வேண்டும். அதற்கு இன்னும் ஒரேஒரு வருடம் தான்."

"என்னடா, என்னவோ கதை யெல்லாம் பேசறே! நம்வரைக்கும் நாம் பார்த்துட்டுப்போறதே பெரிய சிரமத்திலே இருக்குது. ஊருக் கெல்லாம் உதவி செய்யறதுக்கு நம்மாலே முடியுமா?"

"ஊருக்கெல்லாம் உதவவேண்டு மென்று நான் சொல்கிறேன் அப்பா? காலம் எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்று நான் சொல்கிறேன் அப்பா? ஏதோ ஒரே ஒரு வருடம்!"

"ஒரே ஒரு வருடம்! சும்மாவா கிடக்குது? அதுக்கு ஆயிரத்துக்கு மேலே வேணுமேடா! — அதுதான் போகட்டும். அந்த ஒரு வருட காலத் துக்கும் கார்த்தியோட அம்மா, அப்பா, மத்தவங்க எல்லாம் சாப்பி

வேண்டாமா? அதுக்கு என்னு செய்யறது?''

"அதுக்குக்கூட நீங்கள்தான் அப்பா உதவிசெய்ய வேண்டும்! உங்களால் ஒரு நாலு உயிர்களைக் காப்பாற்ற முடியாதா ஒரு வருடத்துக்கு?''

"ஏண்டா, ஒரு வருடமின்னு உனக்கு ஒருநாள் மாதிரித் தெரியுதா என்ன? — சரி, அதையும் தள்ளிப்போடு. அந்த ஒரு வருடத்துக்குப் பிறகு எடுத்த எடுப்பிலே கார்த்திக்கு வேலை கிடைச்சுடுமா?''

"உடனே வேலை கிடைக்குமோ, இல்லையோ! அந்த வேலை கிடைப்பதற்கு இந்த ஒரு வருடத்திலே தேர்வு எழுதுவதன் மூலமாக வழியும், வகையும் காணமுடியும் அல்லவா?''

"என்ன புத்திடா உனக்கு? உன் மாதிரி உலகத்திலேயே யாரையும் காணமுடியாது! — அதிருக்கட்டும். நீ சொல்வதுதான் உன் முடிவா?''

"ஆமாப்பா! கார்த்திக்குப் படிக்க வாய்ப்புக் கிட்டவில்லை யென்றால், நானும் படிப்பை நிறுத்திக்கொள்வது என்று முடிவு கட்டிவிட்டேனப்பா!''

"என்னு!'' என்று வியப்போடு வினவிக்கொண்டு வாசுவை ஏறிட்டுப்பார்த்தார் முருகேசனர். தான் சொன்னதில் உள்ள உறுதியைக் காட்டுபவன்போல் அப்படியே நிமிர்ந்து நின்றுன் வாசு.

இதெல்லால் தலையெழுத்து என்று முனகிக்கொண்டே உள்ளறைக்குச் செல்வதைவிட வேறு எதையும் சொல்லவோ செய்யவோ முருகேசனரால் முடியவில்லை.

•

எடுத்த காரியத்தை வாசு முடித்துவிட்டுத்தான் உட்கார்ந்தான். ஓராண்டு முடிந்துவிட்டது. தேர்வு வந்தது. வாசு எழுதினன். கார்த்தியும் எழுதினன். முடிவு வெளிவந்தது. இருவரும் வெற்றிபெற்றிருந்தனர். இவையெல்லாம் எளிதில் நடந்துவிட்டாற்போல் தென்பட்டன. ஆனல், கார்த்திக்கு இப்போதுவேலை வேண்டுமே! அவன் அலைந்தான். ஆறு மாதங்கள் அலைந்துகொண்டேயிருந்தான். வேலை கிடைக்கும் அறிகுறியைஎங்குமேகாணமுடியவில்லை. கடைசியில் வாசுவின் முயற்சியால் சென்னையிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் உள்ளூர் விற்பனை ஏஜெண்டாக வேலை கிடைத்தது. அந்த வேலை வாசுவின் முயற்சியால் தான் கிடைத்தது. ஆனல், வாசுவின் வெறும் முயற்சி மட்டும் அதற்குப் போதவில்லை. முருகேசனரின் சிபாரிசும், உதவியும் அதற்குத் தேவைப்பட்டன. முருகேசனர் என்னவோ தயக்கமேதும் காட்டாமலேதான் அந்த உதவிகளைச் செய்ய முன்வந்தார். என்றாலும் அவர் உள்ளத்தில் ஒரு எண்ணம் பொரி உதிர்த்துக்கொண்டிருந்தது —'பயல் நம் கையில்தான் சிக்கிக்கொண்டிருக்கிறன். எந்த நிமிடம் வேண்டுமானலும், எப்படி வேண்டுமானலும் அவனை நம்மால் ஆட்டிப்படைக்க முடியும் என்ற எண்ணம். இதைப்பற்றியெல்லாம் வாசு கவலைப்படவில்லை. எப்படியோ கார்த்திக்கு வேலை கிடைத்தது. அந்த மட்டும் அவன் மன நிறைவைக் கண்டான். நிம்மதியாக மூச்சுவிட்டான்.

## 3. பொதுநலத் தொண்டு

பள்ளியிற் படிக்கும் காலந் தொட்டே—சில மாணவர்களைப் போல்—தான் உண்டு, தான் கற்கும் சுவடி யுண்டு, பாடம் கேட்கும் ஆசிரியர் உண்டு, பயிலும் பள்ளியுண்டு என்ற குறுகிய எல்லைக்குள் அடங்கிக்கிடக்கும் மனநிலை இல்லாதவனக இருந்தான் வாசு. சுற்றுப்புறத்தை உற்றுநோக்கும் மனப்பாங்கு அவனிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. அந்த அமைவு காணும் பொருள் எல்லாம் புதிதாக ஏதோ ஒன்றைக் கண்டுபிடிக்கும் பெரு நோக்கோடு தன் கண்ணிற்பட்ட ஒவ்வொன்றையும் துருவித் துருவி, ஊடுருவி நோக்கும் ஓவியக் கலைஞன் ஒருவனின் உளப்பாங்கின் சாடையோடு அமைந்திருந்தது. காவியக் கலைஞன் ஒருவனின் எண்ண விநோதத்தின் சாடையோடு அமைந்திருந்தது. ஆமாம், சாடையோடு அமைந்திருந்தது. அந்தச் சாடைக்கு அப்பால்தான் அவன் காண்கின்ற மாந்தரிடையே நிலவுகின்ற நிலை வேறுபாடுகளை உன்னிப் பார்க்கும் தன்மையொன்று உறுதியாக நிலைபெற்றிருந்தது. அந்த நிலைபெற்ற தன்மை தாழ்வுற்ற மக்களைப் பார்த்தபோது, அவர்கள் படும் துன்பத்தையும், துயரத்தையும் கண்டபோது—அந்தத் துன்பத்துக்காகவும், துயரத்துக்காகவும் கண்ணீர்விடவேண்டும் போன்ற தொரு உள்ளமுருக்கும் நிலையினை அவன்பால் ஏற்றிக் காட்டியது. மற்றவர்களின் துயர் கண்டு உள்ளம் உருகி நிற்கும் அந்த நிலை மேலும், மேலும், நாளும், நாளும் அவன் உணர்வோடு உறுதியாகக் கால்கொண்டவண்ணமே இருந்தது. அழுந்த, அழுந்த வேரூன்றிக் கொண்டே வந்தது. இவ்வகை எண்ணங்களும், தன்மையும் பள்ளியிற் படிக்கும்போது வெறும் மின்னல் எனத் தோன்றித் தோன்றி மறைவதாக அமைந்திருந்தன. கல்லூரிக்குச் சென்றபோது, அவை தோன்றிய விரைவில் மறைந்துபோகும் குணத்தை இழந்துகொண்டுவந்தன. சிறிது சிறிதாக நிலைபெற்றுக் கொண்டுவரும் போக்கினை எய்திக் கொண்டு வந்தன. கல்லூரியிலிருந்து வெளிவந்தபோது அவை நீண்ட நேரம் உள்ளத்தே நிலைக்கும் ஒரு தன்மையைப் பெரிதாகப் பெரிதாகப் பெற்றுக்கொண்டே வந்தன. போகப் போக அந்த எண்ணமும், அந்த இரக்க உணர்வுமே வாசுவாக மாறிக்கொண்டு வந்தன. வாசுவே அந்த எண்ணமாக, இரக்க உணர்வாக மாறிக்கொண்டு வந்தான். அந்த உணர்வும், எண்ணமும் வெறும் உணர்வும், எண்ணமுமாகி நின்றுவிடும் தன்மையையோ, ஓய்ந்துவிடும் தன்மையையோ கொண்டுவிட்டதாகி முடிந்துவிடவில்லை. வளர்ந்து வந்த உளப்பாங்கு, வறுமை மிஞ்சித் தாழ்வுற்றுக் கிடக்கும் மக்களின் நிலைகண்டு கண்ணீர் வடிக்கும் செயலோடு, தன்னை முடித்துக்கொள்ள விரும்பவில்லை. துன்பப்படும் மக்களின் கவலை நீங்க வழி காண்பதில் இறங்கியது அந்த உளப்பாங்கு. வறுமையை ஓட்டுதற்கு வகை காண முனைந்தது அந்த உளப்பாங்கு. அந்த முயற்சியும், முனைப்பும் சீர்திருத்தக் கருத்தோடு செயற்பட்டு வருவோரின் கூட்டத்தில் சேர்ந்து, கூட்டுக் கொள்ளச் செய்தது வாசுவை. அறிவுப் பணியில் ஈடுபட்டுள்ளார் குழுவில் அவனும் ஒருவன் ஆனன்.

வாசுவின் ஆருயிர் நண்பன் கார்த்தி; கார்த்தியின் ஆருயிர் நண்பன் வாசு—என்றால், அந்த நட்பின் முன்னிலை அவர்களிருவரிடத்தும் ஒழுங்கமைந்திருந்த உளப்பாங்கு தான்; எண்ணச் சால்புகள்தாம்; இரக்க உணர்வுகள்தாம். படிப்படியாக அவர்கள் வளர்ந்தார்கள். அவர்கள் கல்வி வளர்ந்தது; எண்ணம் வளர்ந்தது; பொது நோக்கு வளர்ந்தது; அவர்களின் நட்பு வளர்ந்தது.

கல்லூரியிலிருந்து வெளிவந்த போது வாசுவின் எண்ணம்கூட ஏதாவது ஒரு அலுவலில் அமர்ந்து கொள்ள வேண்டுமென்று தானிருந்தது. முதலில் அவன் தந்தை அதற்கு முட்டுக்கட்டையாக இருந்தார்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"உனக்கு எதுக்கு வேறொரு இடத்திலே உத்தியோகம்? இருக்கிற நம் தொழிலை விரிவுபடுத்தினால் உன்னைப்போல் இன்னும் பத்துப்பேருக்கு நாம் வேலை கொடுக்கலாமே!" என்ற அவருடைய கருத்தை அவன் ஏற்றுக்கொண்டான். ஆனால், தன் தந்தையின் போக்கோடு ஒட்டிக் கொண்டுபோய் எந்தச் செயலிலும் ஈடுபடமுடியாததொரு நிலைக்கு முடிவில் அவன் வரவேண்டியதாயிற்று. மெய்யில்லை; அதனால் பொய்யுமில்லை. இன்பமில்லை; அதனால் துன்பமில்லை. நலமில்லை; அதனால் தீதுமில்லை — என்றதொரு கற்பனையுலகை வாசு தன் கற்பனை நாட்டில் கற்பனையாகக் காணவிரும்பினான். அவன் காண விரும்பிய உலகுக்கும், —தந்தையின் ஆலோசனைப்படி அவன் தொழில் முறையில் ஈடுபடப் போன உலகுக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு; — வெகு வெகு தொலைவு. அவற்றைப் பார்த்த போது அவன் உள்ளம் அதிர்ந்து குழம்பியது; அவனுக்கு மலைப்புத் தட்டியது. அந்தக் குழப்பத்திலும் மலைப்பிலும் சில நாட்களை அவன் வறிதே கழித்தான். "அம்மம்ம! மக்களின் வாழ்வு எவ்வளவு பெரிய அதள பாதாளத்தில் கிடக்கிறது! இவர்களை எப்படி மேட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கமுடியும்? இது நம்மால் ஆகக்கூடிய காரியமா?" என்ற வினாவை ஒரு நாள் மருட்சி நிறைந்த நோக்கோடு, குழப்பத்தோடு கார்த்தியிடம் போட்டான் அவன். (தொடரும்)

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

பெருமையை உணர கல்லூரிப் படிப்பு போதாது? அனுபவம் வேண்டும்! மனிதனின் சுயநலம் தான அவன் மனதில் கேள்வியாகிறது. அந்தக் கேள்விதான் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நல்லதாகவும் கெட்டதாகவும் பிறரால் உணர முடிகிறது. நீ பெண்ணாகப் பிறந்திருந்தால் உணர முடியும் பெற்ற பிள்ளைகளுக்காகப் படும் பாட்டை! பணம் கடன்கொடுத்த காரணத்திற்காகப் பாவையை — உனக்கென்று பிறந்ததாக எண்ணியிருந்தோமே, அந்தக்கண்மணியை பலி கேட்டான் பக்கத்து ஊர்ப் பணமூட்டை. அவன் தந்தை மறுத்தார். மானம் போகட்டும்! மரியாதை போகட்டும்! ஆனால், என் மகள் வாழ்வு, உப்பில்லாப் பண்டமாக— உள்ளமில்லா உடலாகப் போகக் கூடாது என்றார். ஆனால் அவர் மனைவி, கண்மணியின் தாய், கணவனைச் சிறை அனுப்பத் துணிவாளா? மகளிடம் கெஞ்சினாள்...... மன்றாடினாள்.........பலன்...? பணமூட்டைக்குப் பலியானாள் பாவை! தியாகம் செய்தாள் காதலை — பெற்றோருக்காக! துரோகம் செய்தாள் உனக்கு. இச்சூழ்நிலைக்காக! தம்பி! இதில் குறை யார்மீது கூறுவது? இச்சமுதாயத்தில் இன்றளவும் மாறுமல், மறையாமல் இருக்கிறதே பணத்தைக்காட்டி பலம் பெறும் நிலை, அதற்காக வெட்கப்படு! விசாரப்படு! அந்தப் பணத்திமிருக்கு மருந்திடும் நாள் என்றாளோ அந்நாளே நம் சமுதாயத்தின் நல்லதொரு எதிர்காலம் அமைக்கும் திருநாள் என்றுகூறி என்னை உணர்ச்சியற்றவளாகிவிட்டாள் என் அன்னை!

ஒருநாள் அலுவலக வேலை முடிய இரவு மணி எட்டாகிவிட்டது. உணவு விடுதியில் இரவு உணவை முடித்துக்கொண்டு, அறைக்குத் திரும்பிக்கொண்டு இருந்தேன். ஒரு குரல் ஐயா! என விளித்தது. திகைத்தேன்......தயங்கினேன்..... திரும்பினேன்....நோக்கினேன்! ஒரு பெண், அழகாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் அழுது வடியும் வீதி விளக்கு அவள் அழகைப் பறைசாற்றவில்லையாயினும், மெல்லிய கீதமாக இசைத்தது. அருகில் வந்தாள்.......பெண்மையின் மென்மையை என் உள்ளம் உணர்ந்தது.

யாரது? என்னவேண்டும்? என்றேன். என்ன ஐயா! ஒன்றும் புரியாததுபோல் கேட்கிறீர்கள்? என்றாள். பழுதை என்று நினைத்துப் பாம்பைப் பிடித்ததுபோல் ஆகியது எனக்கு! பயங்கரங்களின் அழகுப் போர்வையை அன்றுதான் நண்பா உண்மையிலேயே கண்டேன்.

தாயே! அந்த அளவுக்கு நான் இன்னும் துணியவில்லை. நீயோ! ஆனால் ஒன்றுமட்டும் கூறுகிறேன்! கவனத்தில் வைத்துக்கொள்! என்ற வாறு நடந்தேன். அவள் தொடர்ந்தாள். வாழ்க்கையில் எவ்வளவு துன்பமும், துயரமும் நேரிட்டாலும் இவ்விழிநிலை எய்துவதைவிட மடிந்துவிடுவது மேல். ஆகவே இனியாவது நல்ல வாழ்க்கை வாழப் பழகு என்றேன்.

ஐயா! நானும் இப்படி வாழ ஆசைப்படவில்லை. இம்மூடச் சமுதாயம் என்னை மானத்துடன் வாழ விடவில்லை.

வியப்புடன் விழியோட்டினேன்... ஓட்டிய விழிகளைத் திறக்கமுடியவில்லை என்னால்...! அந்த அமைதி நிறைந்த வீதியில், ஒளி உமிழ்ந்து நிற்கும் பங்களா வாயிலில், அவள் முகம் எனக்கு மிக நன்றாகத் தெரிந்தது. ஆம் கனகு! அவள் யார் தெரியுமா? அவள்தான் என்னிடமிருந்து பிரிக்கப்பட்ட கண்மணி! என் உடல் சில்லிட்டுவிட்டது. உயிரோட்டம் இருக்கிறதா? இல்லையா? என்றே புரியவில்லை. 'கண்மணி! கண்மணி!' என என் வாய் சன்னமாக இழைந்தது. உணர்வு இருந்தாலல்லவா?

'ஆ! நீங்களா?' என்று என் கால்களைக் கட்டிக்கொண்டாள். நடு வீதியின் நாயகர்களாக நிற்கப் பிரியப்படாமல், என் அறைக்கு அழைத்துச்சென்றேன். அவள் என்னிடம் கூறிய கதை இதுதான்...

மணமான ஆறு மாதங்களில் மணாளனை இழந்தாள். காரணம் பணம்! எந்தப் பணம் கண்மணியை பணமூட்டைக்குச் சொந்தமாக்கியதோ அந்தப் பணம்—அவரை— யாரோ கயவர்கள், இரவோடிரவாக அடித்து ஆற்றிலெறிந்துவிட்டனர். சட்டம் என்ன செய்தது என்று தெரியவில்லை. கேட்க மறந்துவிட்டேன் அவளை.

அறிமுகமானவர்கள் யார் இருக்கிறார்கள்? என்னைத் தேடித் துணையின்றிச் சென்னைவந்தாள். ஏமாற்றினான் ஒருவன்... அதன் பலன்... அவள் கற்பிழந்தாள்.

*

அலைகள் தம் கடமையைச் சரிவரச் செய்துகொண்டிருந்தன. இயற்கை தன் கடமை உணர்ந்து மாறியது ஆனால் சமுதாயம்.........? அந்தக் கேள்விக் குறிதான் அவ்விளைஞர்களின் மனதில் பெரும் போராட்டமாகியது!

முடிவு......?

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.